# தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲௯௱அஎ, | மலர் |
| --- | --- | --- |
| ௩௨ | துன்முகி, வைகாசி, | ௨. |
| | 1956 மே, சூன். | |


திருமுறை கண்ட புராணத்திற் கூறியுள்ள

# தேவாரப் பண்களின்

## கட்டளை விளக்கம்.

V. S. கோமதிசங்கர ஐயர்,

(வீணை விரிவுரையாளர் - அண்ணுமலைப் பல்கலைக்கழகம்)

இயல் இசைகளின் தொடர்பாக நமது முன்னோர்கள் கூறும் ஒவ்வோர்எளிய சொற்களும் நமது மனம் புத்திக்கு அப்பாற்பட்டவைகளாகும். அவர்கள் கூறும் ஒவ்வொரு கருத்தையும் நாம் பன்முறை சிந்தித்துப் பார்த்தாலன்றி அவற்றின் உட்பொருள்களும் நன்மைகளும் புலனுகமாட்டா. ஆகவே தேவாரப்பண்களின் கட்டளைகளைப்பற்றிப் பல்வேறு கருத்துக்கள் இருப்பினும், இங்கு இசையின் பண்புகளை மட்டும் சிறப்பாக எடுத்துக்கொண்டு இக்கட்டளை வேறுபாடுகள் விளக்கப்படுகின்றன.

ஞானசம்பந்தர் - நாவுக்கரசர் - சுந்தரர் இம்மூவரும் இயற்றிய தேவாரப் பதிகங்கள் நெடுங்காலமாக மறைவுற்றிருந்தன. பின்பு தெய்வச்செயலால் சிதம்பரம் கோயிலில் ஓர் அறையினின்று அவைகள் கிடைக்கப்பெற்றன. மூவருடைய தேவாரத் திருப்பதிகங்கள் இலட்சத்து இரண்டாயிரம் (102000) என அறிகிறோம். ஆனல் இப்போது நமக்குக் கிடைத்த தேவாரப் பதிகங்கள் எழுநூற்றுத் தொண்ணூற்றைந்து (795) ஆகும். மற்றைய திருப்பதிகங்கள் இலட்சத்து ஆயிரத்து இருநூற்று ஐந்தும் (101205) செல்லுக்கு இரையாயின என்பர்.

அக்காலத்தில் வழக்கிலுள்ள எல்லாப் பண்களிலும் இப்பதிகங்கள் அமைந்து குறிக்கொண்டிருந்தன. தேவாரப் பாடல்கள் மறைவுபடவே ஏதோ சில பாடல்கள் மட்டும்

அங்கொன்றும் இங்கொன்றுமாக வழங்கினவேயன்றி மற்ற எல்லாப் பதிகங்களும் மறக்கப்பட்டுவிட்டன. செல்லுக்கிரையான பெரும்பகுதிப் பதிகங்களுடன் அவற்றின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பண்கள் (இராகங்கள்) இவைகளென அறிவதற்கியலாமலும் போயின. ஆதலினால் இப்பொழுது நம்மால் அறியப்படும் பண்கள் சிலவேயாகும்.

ஞானசம்பந்த சுவாமிகளின் 384-திருப்பதிகங்களும் 19-பண்களிலேயே அடங்கிவிட்டன. நாவுக்கரசரின் 311- திருப்பதிகங்களும் 12-பண்களிலேயே அடங்கிவிட்டன. ஞானசம்பந்த சுவாமிகளின் 19-பண்கள் போக நேரிசை, விருத்தம், குறுந்தொகை, தாண்டகம் என்ற நான்கும் அப்பருக்கே உரித்தானவையாகும். இந்நான்கும் விருத்தப் பாக்களாகையால் இவைகள் பண்களல்ல என்று கூறுவாரும் உளர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் 100-திருப்பதிகங்களும் 15-பண்களிலேயே அடங்கிவிட்டன. பழம் பஞ்சுரம், செந்துருத்தி என்ற இரண்டு பண்களும் இவருக்கே உரித்தானவை. மற்ற இருவருக்கும் இல்லை. ஆகவே மூவரின் 795-தேவாரப் பதிகங்களினின்று நமக்குக் கிடைத்த பண்கள் 19+3+2=24 ஆகும். அப்பரின் விருத்தப் பாக்களை நீக்கிவிட்டால் 19+2=21 பண்களே கிடைக்கின்றன.

தேவாரப் பதிகங்களும் பண்களின் பெயர்களும் மறைந்துவிடவே தமிழ்ப் பண்களின் பெயர் காலப்போக்கில் மாறுபட்டு வேற்று மொழியின் பெயரால் அழைக்கப்பட்டுப் பரவலாயிற்று. இப்போது வேற்றுமொழிப் பெயரால் தமிழ் நாட்டில் அழைக்கப்பட்டுவரும் தோடி, தன்யாஸி, புன்னாகவராளி, ஹிந்தோளம், நாட்டை, பூபாளம், சாவேரி, நாதநாமக்ரியா, வஸந்தா, ஸௌராஷ்டிரம், பைரவி, ஆனந்த பைரவி, முகாரி, உசேனி, காஹரப்ரியா, மத்யமாவதி, கானடா, சுத்தசாவேரி, காம்போதி, சகானா, கமாசு, கேதாரகௌளை, சுருட்டி, செஞ்சுருட்டி, யதுகுல காம்போதி, நாட்டைக்குறிஞ்சி, மோகனம், சங்கராபரணம், அடாணா, நீலாம்பரி, ஆரபி, காப்பி, கேதாரம், வேகடை, பந்துவராளி, வராளி, பூர்வகல்யாணி, சாரங்க – என்ற 40 இராகங்களும் தமிழ் நாட்டுப் பழம் பெரும் பண்களேயாகும். இப் பண்களுக்கு நல்ல தமிழ்ப் பெயர்கள் பொருட் செறிவோடு இருக்க, தற்காலம் இவ்வொலிகளின் பண்புகள் வேற்றுமொழிப் பெயர்ப் போர்வையால் மூடப்பட்டிருக்கின்றன. இவற்றை அகற்றி இவ்வொலிகளுக்குரிய உண்மையான தமிழ்ப் பெயர்கள் எவை எனக்காண்பதே பண்ணாராய்ச்சி — கட்டளை பேத விளக்கம் — இவைகளின் கொள்கையாகும்.

தமிழ்ப் பண்களின் அளவுகளை முடிவு செய்வதற்கு நமக்கு திவாகரமும், பிங்கல நிகண்டும் துணையாகின்றன. இவற்றில் நூற்றுமூன்று (103) பண்கள் குறிக்கப் பெற்றுள்ளன. இவற்றின் உதவிகொண்டே அக்காலத்தில் இவ்வளவு பண்களே வழங்கப் பெற்றிருக்கவேண்டுமென்று அறிய முடிகின்றது. வடமொழி நூல்களில் "அனந்தம் வை ராகஹ" இராகங்கள் கணக்கிலடங்காதன என்றும், தமிழ்நூல்களில் பன்னீராயிரம், (12000) ஆதி இசையென்றும் கூறப்பட்டுள்ளன. இதனால் கோடிக் கணக்கான இராகங்கள் உண்டென்று அவற்றிற்குப் பெயரிட முனையவேண்டாம். பன்னீராயிரம் ஆதி இசை யென்றால் 12000 இராகம் உண்டென்றும் எண்ணவேண்டாம். இராகம் என்றாலும் சுரம் என்றாலும் ஒரே பொருளையே தரும். இராகம் என்பது ஓர் மனிதன் என்று வைத்துக்கொண்டால் அம்மனிதனின் உறுப்புக்களின் அடையாளங்களைக் கூறுவதே சுரம் என்பதாகும். ஆகவே ஏழு சுர ஒலிகளின் சேர்க்கையால் பெறப்படும் ஒலி வகைகள் 12000-ஆமென்று முன்னோர்கள் தமது துய்ப்பறிவு (அனுபவ) வாயிலாகக் கண்டறிந்த உண்மையென ஊகிக்க வேண்டும். இவற்றினின்று நாம் அறியவேண்டுவன இசையின் ஒலிச் சேர்க்கையின் மேன்மைகள். ஆயினும் அவை நம்மால் அறியக்கூடியவையல்ல. அவை கடவுள்போல எங்கும் நிறைந்துள்ளவை. நமது சிந்தனைக்கு அப்பாலாய் விளங்குபவை, அவை அளவுகடந்தவை என அறியவேண்டும்.

நூல்களுள் ஒரு கருத்தைக் காணும்போது, அங்குக் கூறிய அளவில் அக் கருத்துக்கள் முடிந்துவிட்டன என்று மக்கள் எண்ணலாகாதென்றும், அப்பொருள் இன்னும் அளவு கடந்துள்ளது என்றும் அறிவதற்குத் தக்கதாக நூலை விரித்து எழுதுவது இயல்பாகும். அதுபோலப் பண்களின் விரிவுகள் அளவு கடந்தவை என்பதைக் கூறுவதற்காக நூல்களில் விரித்து எழுதியிருந்தாலும் அவற்றுள் நமக்குப் பயனுள்ளவைகளாகவும், நடைமுறைக்கு ஒத்து வருவனவாகவுமுள்ள பண்களை நாம் அறிந்து கொண்டாலே போதுமானது. கட்டளை விவரங்களுக்கு வேண்டிய பண்கள் பிங்கல நிகண்டையே அடிப்படையாகக் கொண்டு விவரிக்கப்படுகின்றன.

பிங்கலர் தமக்கு முன்புள்ள நூல்களை ஆராய்ந்தும், தம் காலத்தில் வழங்கிய இலட்சியங்களைக் கைக்கொண்டும், பண் வகைகளை ஓர் வகைசெய்து செப்பனிட்டுத் தந்துள்ளார். எல்லா நூல்களினும் நமக்கு அண்மைக் காலத்ததாய்த் தெரியவருவது பிங்கல நிகண்டாகும். அது 400 அல்லது 500 ஆண்டுகளுக்கு

முன்பு இயற்றப்பெற்றது. அந்நூலில் 103-பண்கள் குறிக்கப் பெற்றிருப்பினும் அவற்றில் 78-பண்களே வழக்கிலுள்ளன வாகும். அந்நூலிலே எவை யாழ்களுடனும், திறங்களுடனும் கூடி விளங்குமோ! அவைகளே பண்கள் (இராகங்கள்) எனக் கூறியுள்ளார். இவற்றை நோக்கும்போது 103-பண்களில் 84-பண்களுக்கே யாழ்களும், திறங்களும் குறிக்கப்பெற்றுள்ளன. இந்த 84-பண்களும் பாலை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்கு யாழ்களில் வருகின்றன.

பாலைக்கு அராகம், நேர்திறம், உறுப்பு, குறுங்கலி, அசான் என்ற ஐந்து திறங்களுண்டு. இந்த ஒவ்வொரு திறத்திற்கும் அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என்று நான்கு நிலைகள் உண்டு. இவற்றுள் அகநிலை, புறநிலை இவ்விரண்டு நிலைகளிற் குறிக்கப்பெற்ற பண்களே தமிழ்நாட்டின் இராகமும் இராக இயக்கமும் ஆகும். அருகியல், பெருகியல் இவ்விரண்டு நிலை களில் குறிக்கப் பெற்ற பண்கள் வடநாட்டு இராகமும் இராக இயக்கமுமாகும். ஆகவே பாலையின் கீழ்வரும் ஐந்து திறங் களுக்கும் நான்கு நிலைகள் வரும்போது $5 \times 4 = 20$ பண்களும் அவற்றின் பெயர்களும் குறிக்கப்பெற்றுள்ளன.

குறிஞ்சிக்கு - கைவளம், காந்தாரம், பஞ்சுரம், படுமலை, மருள், அயிர்ப்பு, அரற்று, செந்திறம் என்று எட்டுத் திறங்கள் குறிக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு திறனுக்கும் அகம், புறம், அருகு, பெருகு என்ற நான்கு நிலைகள் வரும்பொழுது $8 \times 4 = 32$ பண்களும் அவற்றின் பெயர்களும் குறிக்கப்பெற் றுள்ளன.

மருதத்திற்கு - நவிர், வடுகு, வஞ்சி, செய்திறம் என நான்கு திறங்களுண்டு. இவை ஒவ்வொன்றும் நான்கு நிலைகளைப்பெற்று வரும்பொழுது $4 \times 4 = 16$ பண்களும் அவற்றின் பெயர்களும் குறிக்கப்பெற்றுள்ளன.

நெய்தலுக்கு - நோதிறம், பெயர்திறம், யாமை, முல்லை என நான்கு திறங்களுண்டு. இவை ஒவ்வொன்றும் நான்கு நிலைகளைப் பெறும்பொழுது $4 \times 4 = 16$ பண்களும் அவற்றின் பெயர்களும் குறிக்கப்பெற்றுள்ளன.

ஆகவே பாலையின் கீழ் 20- பண்களும், குறிஞ்சியின்கீழ் 32 பண்களும், மருதத்தின்கீழ் 16-பண்களும், நெய்தலின்கீழ் 16-பண்களும் ஆக 84-பண்கள் யாழுடனும் திறங்களுடனும் காணப்படுகின்றன. இவற்றில் அருகு பெருகிலுள்ள 42-பண்

களும் வடநாட்டு இசையியக்கமும் பெயர்களுமென அறிதல் வேண்டும். அகம் புறம் என்பவற்றில் வருகின்ற 42-பண்களும் தென்னுடாகிய தமிழ்நாட்டின் இசை இயக்கமும் பெயர்களும் ஆகுமென அறிதல்வேண்டும்.

இவற்றினுள்ளும் பாலையாழ்த்திறமாகிய நேர் திறமும், குறிஞ்சியாழ்த் திறமாகிய காந்தாரம், பஞ்சுரம், மருள், செந்திறம் ஆகிய இவைகளும், நெய்தல் யாழ்த்திறமாகிய யாமை, முல்லை என்பவையும் ஆக இவ்வேழு திறங்களும் அகநிலைப் பண்களின் பெயராக அமைந்துள்ளன. திறப்பெயரும் பண் பெயரும் ஒன்ருக இருப்பதால் இப் பண்களின் இசையமைதி பொருளமைதி ஆயவைகள் எளிதாகக் கிடைப்பனவாயில்லை. நேர்திறம் என்பது ஒன்றுமட்டும் புறநீர்மை என்ற பண்ணைக் குறிப்பிடுகின்றது. மற்ற ஆறு திறங்களுக்கும் அகநிலையிற் பண்கள் இல்லையென அறிதல் வேண்டும். ஆகவே 84 — பண்களில் ஆறு பண்கள் போக எஞ்சிய 78 — பண்களே இலட்சிய இராகங்களாகும். இவற்றில் 36 — பண்கள் தமிழ்நாட்டுப் பண்பாடுகளையும், 42— பண்கள் வடநாட்டுப் பண்பாடுகளையும் விளக்குவனவாய்ப் பிங்கல நிகண்டின் குறிப்பாலறிகிறேரும்.

பிங்கல நிகண்டைத் தழுவி இப்பண்களின் யாழ், திறம், நிலை, பெயர், பண் ஆகிய இவைகளைத தெளிதற் பொருட்டு ஓர் அட்டவணைக் குறிப்பு அடுத்தப் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதில்பண்களின் விவரங்களைத் தெளிவாகக் காண்க.

இத் தேவாரத் திருமுறைகளுக்குக் கட்டளை வகுத்து உதவியவர் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் அவர்களாவார். அவர் தில்லை மூவாயிரவர்களில் ஒருவர். அவர் நமது மூதாதையரும் அதி மேதையுமாவார். அவரது வாக்கினுல் வந்த இக் கட்டளைகள் பல துறைகளுக்கும் பொருந்துவனவாகும். தேவாரத் திருமுறைகளுக்குக் கட்டளை பேதங்கள் வகுத்தவர் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் அல்லரென்றும், இவர் இசை நுணுக்கங்களையும் இசை இலட்சிய இலட்சணங்களையும் அறிந்தவரல்லர் என்றும், இயலின் இலட்சிய இலட்சணங்களை மட்டுமே நன்கு கற்றறிந்த பெரியாராகும் என்றும் கூறுவாருளர். இவர் காலத்துக்கு முன்பு உமாபதிசிவம் என்ற ஒரு பெரியாரிருந்தனரென்றும், அவர் இசை இலக்கண நுட்பம் நன்கு அறிந்தவரென்றும் அவரே இக்கட்டளை பேதங்களை உலகமக்கள் அறியவேண்டித்

| பாலைப் பண். | பாலையாழ்த் திறங்களும் பண்களின் பெயர்களும் | | | |
|---|---|---|---|---|
| திறங்கள் | அகம் | புறம் | அருகு | பெருகு |
| அராகம் | தக்க ராகம் | அந்தாளி (பாடை) | அந்தி | மன்றல் |
| நேர்திறம் | நேர்திறம் (புறநீர்மை) | வராடி | பெரியவராடி | சாயரி |
| உறுப்பு | பஞ்சமம் | திராடம் | அழுங்கு | தனுஸி |
| குறங்கலி | சோம ராகம் | மேக ராகம் | தக்கராகம் | கொல்லிவராடி |
| ஆசான் | காந்தாரம் | சிகண்டி | தேசாக்கிரி | சுருதி காந்தாரம் |

| குறிஞ்சிப் பண் | குறிஞ்சியாழ்த் திறங்களும் பண்களின் பெயர்களும் | | | |
|---|---|---|---|---|
| திறங்கள் | அகம் | புறம் | அருகு | பெருகு |
| நைவளம் | நட்டபாடை | அந்தாளி (குறிஞ்சி) | மலகரி | விபஞ்சி |
| காந்தாரம் | காந்தாரம் | * செருந்தி | கௌடி | உதயகிரி |
| பஞ்சுரம் | பஞ்சுரம் | * பழம் பஞ்சுரம் | மேகராகக் குறிஞ்சி | கேதாளிக் குறிஞ்சி |
| படுமலை | கௌவாணம் | பாடை | சூர்துங்க ராகம் | நாகம் |
| மருள் | மருள் | * பழந்தக்க ராகம் | திவ்விய வராடி | முதிர்ந்தவிந்தளம் |
| அயிர்ப்பு | அனுத்திர பஞ்சமம் | குச்சரி | அருட்புரி | நாராயணி |
| அராறு | குறிஞ்சி | நட்டராகம் | இராமக்ரீ | வியாழக்குறிஞ்சி |
| செந்திறம் | செந்திறம் | * தக்கணுதி | சாவகக்குறிஞ்சி | ஆனந்தை |

| மருதப் பண் | மருதயாழ்த் திறங்களும் பண்களின் பெயர்களும் | | | |
|---|---|---|---|---|
| திறங்கள் | அகம் | புறம் | அருகு | பெருகு |
| நவிர் | தக்கேசி | கொல்லி | ஆரியகுச்சரி | நாகத்தொனி |
| வடுகு | இந்தளம் | சாதாளி | தமிழ் வேளர்கொல்லி | காந்தார பஞ்சமம் |
| வஞ்சி | பாக்கழி | தத்தள பஞ்சமம் | மாதுங்க ராகம் | கௌசிகம் |
| செய்திறம் | பியந்தை (காந்தாரம்) | சீகாமரம் | சாரல் | சாங்கிமம் |

| நெய்தல் பண் | நெய்தல்யாழ்த் திறங்களும் பண்களின் பெயர்களும் | | | |
|---|---|---|---|---|
| திறங்கள் | அகம் | புறம் | அருகு | பெருகு |
| நோதிறம் | குறண்டி | ஆரியவேளர்கொல்லி | தனுக்காஞ்சி | வியந்தம் |
| பெயர் திறம் | யாழ்பதம் | தாளி | கொண்டைக்ரி | சீவனி |
| யாமை | யாமை | * சாளர்பாணி | நாட்டம் | தானு |
| முல்லை | முல்லை | * சாதாரி | பைரவம் | காஞ்சி |

திருமுறை கண்ட புராணமாக இயற்றித் தந்தனர் என்றும் கூறுவர். உமாபதி சிவம், உமாபதி சிவாச்சாரியார் என்ற இவ்விருவர்களின் பெயர் ஒற்றுமை காரணமாகக் காலத்தால் பிந்தியவராகிய உமாபதி சிவாச்சாரியாரின் பெயரால் திருமுறை கண்ட புராணம் நிலைத்துவிட்டதென்பர். உமாபதிசிவம் என்பவரின் காலம் அவர் இயற்றிய வேறு நூல்கள் அவருடைய உண்மைநிலை இவைகள் செவ்வனே அறியப்படவில்லை. இக்கட்டளை பேதங்களை உமாபதி சிவமோ, உமாபதி சிவாச்சாரியாரோ யாரேனும் வகுத்திருக்கட்டும், அவர்கள் வகுத்து உதவியதிலிருந்து நாம் எத்துணை நன்மைகளைப் பெறலாம், பெறுவதற்கு அவை துணைபுரிகின்றன என்பதே நமக்கு முக்கியமாகும். அவைகளே இங்கு கூறப்படுகின்றன.

நமது தமிழ்நாடு ஒன்றில்மட்டும் தமிழை இயல், இசை, நாடகம் என்று வகுத்து, இம்மூன்றிலும் உள்ள கலை உணர்ச்சிகளை ஏற்றத்தாழ்வின்றி ஒருங்கு சேர்த்து வளர்த்து வந்துள்ளனர். ஆகையால் இக்கட்டளைகள் மேற்கூறிய இயலிசை நாடகமென்ற மூன்றிற்கும் பொருந்துவது போல முன்னோர்களால் வகுக்கப் பெற்றிருக்கின்றன என்று என்போலுள்ளவர்கள் எண்ணினால் அது தவறாகாது. ஏனெனில் இம்மூன்று பகுதிகளுமே இசையின் தத்துவங்களாக அமைந்துள்ளன. இயலில் நற்-றிறமை வாய்ந்தோர் இக்கட்டளை பேதங்களைச் செய்யுட் பிரிவுகளாலும், சீர்பேதங்களாலும் இவ்விவ் வகையில் பிரித்து உணர வேண்டுமென்று மக்களுக்கு விளங்குமாறு எடுத்துக்காட்ட வேண்டும். இவ்வகையில் சுவாமி விபுலானந்த அடிகளார் மிகவும் முயன்று செய்யுட் சீர் வகைகளைக்கொண்டு கட்டளை பேதங்களைத் தாம் எழுதிய யாழ் நூலில் நன்கு விளக்கியுள்ளார்கள். இன்னும் காரைக்குடி தேவாரம் அ. நடேச தேசிகரவர்கள் கட்டளைப் பிரகாரம் தேவாரப் பதிகங்களையே எடுத்து இன்னின்ன பதிகங்கள் இன்னின்ன பண்களின் கட்டளைகளே யாகுமென்று கட்டளை விளக்கம் என்னும் ஒரு புத்தகம் எழுதியுள்ளார். இவ் வேலைகள் தமிழ் மக்களால் வரவேற்கத்தக்கன.

லயத்தில் (தாளம்) நல்ல தேர்ச்சியும் ஆற்றலும் உள்ளவர்-கள் கட்டளை என்பது தாள சம்பந்தமானது. இத் தேவாரப் பதிகங்கள் இன்னின்ன தாளங்களில் இவ்விவ்வாறு அமைதிகள் பெறுகின்றன. ஆகையால் இன்னின்ன முறைகளிற் பாடினால் நமது முன்னோர்கள் கூறிய கட்டளை விவரங்கள் நன்கு புலனாகும் என்று எடுத்துக்காட்டி நிறுவுவது லய வித்துவான்களின் கடமையும் தொண்டும் ஆகும் இசையின் சுருதிபேதம், சுர

பேதம், ஒலிபேதம் நூல்களில் கூறிய நுண்ணிய இசையமைதிகள் இவைகளை அறிந்த நல்லிசைவாணர்கள் கட்டளையென்பது இராக வகைகளை அறிவிப்பனவாகும் அவை இவ்வாறு விளங்குகின்றன என்று எடுத்துக்கூறி மக்களுக்கு அறிவித்தல் சிறந்த தொண்டும் கடமையுமாகும். இவ்வாறு இயலுக்கும், இசைக்கும், லயத்துக்கும் இக்கட்டளை பேதம் பொருந்தி அமைந்து வரும் போது அது இயல், இசை, நாடகம் (அல்லது லயபாவம்) என்ற மூன்றின் பெருமையையும் எடுத்துக்காட்ட உதவுகின்றது எனலாம். இவ்வாறான அம்சங்கள் பொருந்துவனவாய் இக்கட்டளை பேதங்கள் முன்னோரால் கூறப்பட்டிருக்க வேண்டுமென்று அறிதல் நலம்.

இயலென்பது தேவாரப் பதிகத்தின் சாகித்திய பொருளுணர்ச்சி. இசையென்பது அந்த சாகித்தியத்தைப் பண்ணில் பாடும்போது வருவதான இராகச் சுவை (ரச) உணர்ச்சி. லயம் என்பது மெய்ப்பாடு (அங்கசேஷ்டைகளாகிற தாளம்) அல்லது மனக்கருத்திற்கேற்ற பாவ உணர்ச்சி. (இது நிருத்தம் என்றுமாகும்) ஆகவே இம்மூன்றும் சேர்ந்து ஒன்றாய் விளங்கும் போது அதுவே இசை (சங்கீதம்) எனப்பட்டது. இவ்விதமான நல்லிசைகள் தேவாரத்தினுட் புதைந்துகிடக்கின்றன. உலகியலில் மூழ்கி அதுவே பெரிதெனத் திளைத்திருந்த ஒருவர் பின்பு உண்மையின் உயர்வைத் தேடி அறிந்தாற்போல இப்பொழுது உள்ள இசையே மேல் என்று நினைத்து அதில் திளைத்து மூழ்கி இருப்பவர் பின் ஒருகாலத்தில் இவ்விசையில் நலமில்லை, ஆன்மீக உணர்வு இல்லை, இது நிலையற்றது என்று எண்ணித் தேவாரத்தையும் அந்த இசையையுமே விரும்பிப் போற்றுவரென்று இப்பொழுதே உறுதிகூறலாம். ஒரு தேவாரப் பதிகத்தின் இயலிலுள்ள பொருளுணர்ச்சியின் இரசமும், பண்ணிலுள்ள இசையுணர்ச்சியின் இரசமும், தாளத்திலுள்ள லயபாவ உணர்ச்சியின் இரசமும் சேர்ந்து அமையும்போது அது கட்டளை எனப்படுகின்றது. இவ்வித உணர்ச்சிகளே இறைமை ஆகும். இதை உணர்ந்த உமாபதிசிவாச்சாரியார் அவர்கள் நம்மவருக்கு இத்தேவாரத் திருமுறைகளிலமைந்த இம்மூன்று அம்சங்களின் இலட்சிய இலட்சணங்கள் விளங்குவதன்பொருட்டுக் கட்டளை பேதங்களை வகுத்து உதவினர். இவற்றில் இராகம்பற்றி வரும் விவரங்கள் இங்கு குறிக்கப்பெறுகின்றன.

முதலாவதாக மூவரின் தேவாரத் திருமுறைகளுக்கு உமாபதி சிவாச்சாரியார் கூறிய கட்டளை விவரங்களைத் திருமுறை கண்ட புராணத்திலே கூறியுள்ள முறைப்படி கூறுகின்றனம்.

சொன்னட்ட பாடைக்குத் தொகையெட்டுக் கட்டளையா
மின்னிசையாற் றருந்தக்க ராகத்தேழ் கட்டளையாம்
பன்னுபழந் தக்கராகப் பண்ணின் மூன்றுளதா
முன்னரிய தக்கேசிக் கோரிரண்டு வருவித்தார்.

மேவுகுறிஞ் சிக்கஞ்சு வியாழக்குறிஞ் சிக்காறு
பாவுபுகழ் மேகராகக் குறிஞ்சிப் பாலிரண்டு
தேவுவந்த விந்தளத்தின் செய்திக்கு நான்கினிய
தாவில்புகழ்க் காமரத்தின் றன்மைதனக் கிரண்டமைத்தார்.

காந்தாரமாகிய பியந் தையாங் கட்டளைக்கு
வாய்ந்தவகை மூன்றாக்கி வன்னட்ட ராகத்திற்
கேய்ந்தவகை யிரண்டாக்கிச் செவ்வழியொன் றாக்கியிசைக்
காந்தார பஞ்சமத்தின் கட்டளை மூன்றாக்கினர்.

கொல்லிக்கு நாலாக்கிக் கவுசிகத்துக் கூறும்வகை
சொல்லிரண் டாக்கிமிகு தூங்கிசைநேர் பஞ்சமத்திற்
கொல்லையினி லொன்றாக்கிச் சாதாரிக் கொன்பதாப்
புல்லுமிசைப் புறநீர்மைக் கொன்றாகப் போற்றினர்.

அந்தாளிக் கொன்றாக்கி வாகீச ரருந்தமிழின்
முந்தாய பலதமிழுக் கொன்றென்று மொழிவித்து
நந்தாத நேரிசையாங் கொல்லிக்கு நாட்டிலிரண்
டுந்தாடுங் குறுந்தொகைக்கோர் கட்டளையா விரித்துரைத்தார்.

தாண்டகமாம் பாவுக்கோர் கட்டளையாத் தாபித்தங்
காண்டகையார் தடுத்தாண்ட வையாரு டுய்யமுறைக்
கீண்டிசைசே ரிந்தளத்துக் கிரண்டாக வெடுத்துரைத்து
நீண்டதக்க ராகத்துக் கிரண்டாக நிகழ்வித்தார்.

கூறரிய நட்டராகத் திரண்டு கொல்லிக்கு
வேறுவகை மூன்றாக மிகுந்தபழம் பஞ்சுரத்துக்
கேறும்வகை யிரண்டாக்கி யின்னிசை தேர் தக்கேசிப்
பேறிசையா றாக்கியதிற் காந்தாரம் பிரித்திரண்டாம்.

ஒன்றாகுங் காந்தார பஞ்சமத்துக் கோரிரண்டா
நன்றான சீர்நட்ட பாடைக்கு நவின்றா றைக்கிற்
குன்றாத புறநீர்மைக் கிரண்டாகுங் கூறுமிசை
யொன்றாகக் காமரத்துக் கொன்றாகப் போற்றினர்.

உற்றவிசைக் குறிஞ்சிக்கோ ரிரண்டாக வகுத்தமைத்துப்
பற்றரிய செந்துருத்திக் கொன்றாக்கிக் கவுசிகப்பாற்
றற்றவிசை யிரண்டாக்கித் தூயவிசைப் பஞ்சமத்துக்
கற்றவிசை யொன்றாக்கி யானருளால் விரித்தமைத்தார்.

இந்தக் கட்டளை பேதங்கள் பிங்கல நிகண்டிற் கூறியுள்ள 103-பண்களிலும் பொருந்துவனவல்லவென்றும், எந்தப் பண்ணுக்கு யாழும் திறனும் உண்டோ அப்பண்களே இக்கட்டளைக்கு உட்பட்டுவருமென்றும், அவ்வாறு யாழ்களையும், திறங்களையும் 84-பண்களே அடைந்துவருவன வாயினும், திறத்தின் பெயர்களையே பண் பெயராக அடைந்துவருவதில் நேர்திறம் என்ற ஒரு பண் தவிர, மற்ற காந்தாரம், பஞ்சுரம், மருள், செந்திறம், யாமை, முல்லை என்ற ஆறு பண்களும் கட்டளைகட்கு உட்பட்டு வாரதன என்றும் அறியற்பாலன. ஏனெனில் நேர்திறம் என்பதற்கு மட்டும் திறவகையானும் பண்வகையானும் பொருள்கள் கிடைக்கின்றன. மற்ற ஆறும் பண்களாக வரும் வகைகளும் பொருள்களும் நம்மால் அறியக்கூடியனவாக இல்லை.

மேலே கூறிய திருமுறைகண்ட புராணப்படி மூவருக்கும் உள்ள பண்களுக்குக் கட்டளை பேதங்கள் கூறப்பட்டன. பிங்கல நிகண்டில் குறித்துள்ளபடி யாழுடனும் திறனுடனும் 78-பண்கள் காணப்படுகின்றன. அவற்றிற்குரிய இலட்சியமாகிற இயல் பகுதிகள் பெரும்பாலானவை செல்லுக்கிரையாயின. பண்களின் ஒலிகள் மட்டும் ஒருவாறு வேறு பெயர்களோடு வழங்கிவருகின்றன. அப்பண்களுக்கு இயல் வேண்டுமென்ற கருத்துக்கொண்டு கட்டளைகள் வகுக்கப்பெற்றன. நமக்குக் கிடைக்கப்பெற்ற இயல்களைக்கொண்டு மற்ற இசைகளின் இலட்சியத்தைப் பரப்புதற் பொருட்டே கட்டளைகள் ஏற்படுத்தியதற்கு நாம் நன்றியுள்ளவர்களாவோம். நமக்குக் கிடைத்த பதிகங்களில் நட்டபாடை என்ற பண்ணில் உள்ள பதிகங்களை நட்டபாடையிலும், அதைச் சேர்ந்த மற்ற ஏழு பண்களிலும் பாடிக்கொள்ளலாம் என்பதே "சொன்னட்ட பாடைக்குத் தொகை யெட்டுக் கட்டளையாம்" என்பதன் பொருள். ஆகவே தேவாரப் பதிகத்திலுள்ள 24-பண்களுக்கும் கட்டளை விகற்பங்களினால் பல பண்களும் வருவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது. அவ்வாறு வரும் பண்களின் பெயர்கள் வருமாறு.

1. சாதாரி - குர்ச்சரீ - தேசாக்ரீ - கொண்டைக்கிரீ - இராமகிரீ - மலகரீ - அருள்புரீ - சாயரீ-உதயகிரீ இந்த ஒன்பது பண்களும் சாதாரியின் 9 கட்டளைகள் ஆகும்.

2. நட்டபாடை - ஸாளரபாணி - தக்கணுதி - அந்தாளிபாடை - தணுக்காஞ்சி - ஆரியகுச்சரீ - சுருதிகாந்தாரம்-கொல்லிவராடி இந்த எட்டுப் பண்களும் நட்டபாடையின் 8 கட்டளைகளாகும்.

3. தக்கராகம் - சோமராகம் - மேகராகம் - துக்கராகம் - அந்திராகம் - கௌடிராகம் - நாகராகம் இந்த ஏழு பண்களும் தக்கராகத்தின் 7 கட்டளைகளாகும்.

4. வியாழக்குறிஞ்சி, ஆரியவேளர்கொல்லி, பெரியவராடி, திவ்யவராடி, சாவகக்குறிஞ்சி, முதிர்ந்தவிந்தளம் இந்த ஆறு பண்களும் வியாழக்குரிஞ்சியின் 6 கட்டளைகளாகும்.

5. தக்கேசி - வராடி - குறண்டி - திராடம்-தனுஸி-சிவனி இந்த ஆறு பண்களும் தக்கேசியின் 6 கட்டளைகளாகும்.

6. குறிஞ்சி - சிகண்டி - செருந்தி – அழுங்கு - விபஞ்சி இந்த ஐந்து பண்களும் குறிஞ்சியின் 5 கட்டளைகளாகும்.

7. இந்தளம், யாழ்பதம், பைரவம், சாங்கிமம் இந்த நான்கு பண்களும் இந்தளத்தின் 4 கட்டளைகளாகும்.

8. கொள்ளி - பாடை – தாளி - நாட்டம் இந்த நான்கு பண்களும் கொல்லியின் 4 கட்டளைகளாகும்

9. காந்தாரம் - பியந்தை - வியந்தம் இம் மூன்று பண்களும் காந்தாரத்தின் 3 கட்டளைகளாகும்.

10. பழந்தக்கராகம் - சூர்துங்கராகம் - மாதுங்கராகம் இம் மூன்று பண்களும் பழந்தக்கராகத்தின் 3 கட்டளைகளாகும்.

11. காந்தாரபஞ்சமம் - தத்தள பஞ்சமம் - அனுத்திர பஞ்சமம் இம்மூன்று பண்களும் காந்தாரபஞ்சமத்தின் 3 கட்டளைகளாகும்.

12. மேகராகக்குறிஞ்சி - கேதாளிக்குறிஞ்சி. இப்பண்கள் மேகராகக்குறிஞ்சியின் இரண்டு கட்டளைகளையும், 13. சீகாமரம். நாகத்தொனி இப்பண்கள் சீகாமரத்தின் 2 கட்டளைகளையும், 14. நட்டராகம் - ஆனந்தை இப்பண்கள் நட்டராகத்தின் 2 கட்டளைகளையும், 15. கௌசிகம் - கௌவாணம் இப்பண்கள் கௌசிகத்தின் 2 கட்டளைகளையும், 16. புறநீர்மை (நேர்திறம்) நாராயணி இப்பண்கள் புறநீர்மையின் 2 கட்டளைகளையும், 17. பழம்பஞ்சுரத்தின் 2 கட்டளைகளையும், 18. சாரல் - மன்றல் இப்பண்கள் சாரலின் 2 கட்டளைகளையும் குறிக்கின்றன.

19. பாக்கழி, 20. அந்தாளிக்குறிஞ்சி, 21. பஞ்சமம், 22. சாதாளி, 23. தாணு, 24. காஞ்சி இவ்வொவ்வொரு பண்ணும் முறையே செவ்வழி, அந்தாளிக்குறிஞ்சி, பஞ்சமம், செந்துருத்தி, குறுந்தொகை, தாண்டகம் என்ற ஒவ்வொரு கட்டளையையும் குறிக்கும். ஆகவே இப்பண்கள் தற்கால வழக்கிலுள்ள

# அருள்நெறியில் திருவள்ளுவர்

[ வித்துவான் ந. இராமநாதன் ]

பன்னிறப் புள்ளினம் பறந்தொருங் கீண்டிப்பாடி மகிழும் பழுத்த மரமொன்றினைக் கானகத்தே காணுகின்றோம். அதன் கண் மனத்தைக் கவரும் மணமும், கண்ணைக் கவரும் நிறமும் கொண்ட கனிகளைக் காணுகின்றோம். எனதென்னும் புறப் பற்றால் வளைத்து வேலியிடுவாரும் ஆண்டில்லை. கன்று காலி களை ஆற்றுப் படுத்திய புன்றலைச் சிறுவர்கள் கல்லானும் சில்லா னும் அடித்துக் கனிகளையும் காய்களையும் உதிர்த்து ஒருபால் உண்டு மகிழ்கின்றனர். இவ்வாறு மக்களும் மாவும் புள்ளினங் களும் பிறவும் ஒக்க ஒருசேர உண்டு மகிழ வாழும் வாழ்வே அருள்நெறியாகும். இவர் நமக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்னும் வேறுபாடின்றி உதவி வாழும் வாழ்வு என்பது பொருள். சுருங்கக் கூறின் பல்லார் பயன் துய்ப்பத் தான் வருந் தியும் வாழும் வாழ்வே அருள் நெறியாகும்.

மரத்தில் கனியைக் கண்டதும், அக்கனியானது மரத்தின் இன்றியமையாத ஒருறுப்பின் முழு வளர்ச்சி யென அறிகின் றோம். அதுபோல அருள் என்பதும் மனிதனுக்கமைந்த இன்றி யமையாத குணங்களுள் ஒரு குணத்தின் முழு வளர்ச்சி யென் பதை அறிதல் வேண்டும். மரத்திற்கு இலைகள், வளார்கள்,

---

44 ம் பக்கத் தொடர்ச்சி.

எந்தெந்த இராகங்களைப் பெற்றுவருதல் முறை என்பது ஆராயத் தக்கது. அவை பின்பு விளக்கப்படும்.

பிங்கல நிகண்டில் குறித்த 78 பண்களும் கட்டளை பேதங் களினால் 78 இராகங்களாகக் கணக்கிடப்படுகின்றன என்பது தெளிவாகின்றது. அகநிலை புறநிலையில் வரும் 36 பண்களுடன் அருகு பெருகில் வரும் மேகராகக்குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, காந்தாரபஞ்சமம், கவுசிகம் ஆகிய நான்கு பண்களும் தென்னாட் டில் வெகு காலங்களாக இலட்சியப்பட்டு வருவதால் தென்னாட் டுப் பண்களுடன் சேர்க்கப்பட்டுள்ளன. ஆகவே $36+4=40$ பண்கள் தென்னாட்டு இராகங்களாகும். இந்த நாற்பது பண் களுக்குரிய இராகங்கள் இன்னவை எனக் கண்டு தெளிவது இன்றியமையாமையாகும்.

கிளைகள் எனப் பல உறுப்புக்களுண்டு. அவை யெல்லாம் மரம் பூத்துக் காய்த்துக் கனியாவதற்குத் துணைபுரிவனவே யாகும். வண்டின் வருகைக்காகவே வண்ண மலர்கள் இன்மணம் பரப்பிக் காத்துக்கொண்டிருக்கின்றன. இனம் பெருக்கும் செயலுக்காகவே மரம் முதலியன பூத்தும் காய்த்தும் கனி கொடுத்தும் நிற்கின்றன. இவ்வாறே மனிதனுக்கெனப் பலவகையான குணங்களிருப்பினும் அவை யெல்லாவற்றினுஞ் சிறந்தது அருள் ஆகும். பிற குணங்களெல்லாம் அருளுடையனாய் வாழ்வதற்குத் துணை செய்வனவே யாகும். மேலும் கனியானது மரத்தில் திடீரென்று ஒரு நாளில் பூத்துக் காய்த்துக் கனியாவதில்லை. கனியாவதற்கு முன்னர்ப் பல வகையான நிலைகளும் அவற்றிற் கேற்ற பெயர்களும் உண்டென்பதை அறியலாம். ஒரு காலத்தில் வெளியே தெரியாதிருந்த மரத்தின் கனி கொடுக்கும் ஆற்றல் அரும்பென்னும் பெயரால் அரும்புகின்றது. போதென்னும் பெயரால் பொதுளுகின்றது. மலர் என்னும் பெயரால் அலர்கின்றது. பிஞ்சாகி உருவடைகின்றது. காயாகிக் காய்க்கின்றது. பின்னர்க் கனியாகி அருள்கின்றது. இதனைப் போலவே அருளுணர்ச்சிக்குப் பலவகையான நிலைகளும் பெயர்களும் உண்டு.

திருவள்ளுவர் அருளின் நிலைகளை இருவகைப்படுத்தி உரைப்பர். அருளுக்கு முந்திய நிலை அன்பென்பது ஆகும். அன்பினுடைய முதிர்ச்சியே அல்லது வளர்ச்சியே அருளாக ஆகின்றது. இதனை "அருளென்னும் அன்பீன் குழவி" என்பதனால் அறியலாம். அன்பால் பெறப்பட்டது அருள் என்று கூறவே, அன்பு முதலாக அதன் வழி நிற்பது அருள் என்பது பெறப்படும். அன்பு இல்லறத்தில் கூறப்படுவது. அருள் துறவறத்தில் கூறப்படுவது. இல்லறத்திற்கு அன்புடைமை சிறந்தாற் போல அருளுடைமை துறவறத்திற்குச் சிறந்ததாகும். அன்புடைமை என்றால் மனைவி, மக்கள், சுற்றம் என்ற தொடர்புபற்றி எழும் பற்றுள்ளமாகும். தொடர்பு பற்றி எழும் பற்றுள்ளம் அப் பயிற்சி வயத்தான் தொடர்பு வேண்டாது எல்லா மக்களிடத்தும் அஃறிணை உயிர்களிடத்தும் பற்றுள்ளம் கொள்ளச் செய்து அருளாக ஆகின்றது. அருளுக்கு விளக்கம் சொல்லப் போந்த பரிமேலழகர் "தொடர்பு வேண்டாது எல்லா வுயிர்கண் மேலும் செல்லுவதாய கருணை" என்று கூறுவர்.

திருவள்ளுவர் வெளிப்படையாக அருளுக்கு முதல் அன்புடைமை என்று கூறியிருந்தாலும் அன்புக்கு முன்னர் ஒரு நிலையும் அருளுக்கு முன்னர் ஒரு நிலையும் உண்டு என்பதை நாம்

உய்த்துணரலாம். அன்புடைமை என்பது தொடர்புடையார் மாட்டுப் பற்றுச் செய்வதானல் தொடர்புடையாரின் தொடர்பு எவ்வகையால் ஏற்படுகின்றது? சுற்றத் தொடர்ச்சிக்கு முதலாக நிற்பது மனையாளுடன் கூடி வாழும் காதல் வாழ்வேயாகும். காதல் இல்லையேல் உறவும் இல்லை. இதனல் தொடர்புடையார் மாட்டுச் செய்யும் அன்புடைமை காதல் இல்வழி இல்லையாதலை அறிகின்றோம். இதனல் அருளுடைமைக்கு முதல் அன்பானற் போல அன்புக்கு முதலாக நிற்பது ஆணும் பெண்ணும் ஒத்த மனமுடன் கூடி வாழும் காதல் வாழ்வாகும். இவ்வகையால் காதலை அரும்பு, போது, மலர் என்னும் நிலையில் கூறலாம். அன்புடைமையைப் பிஞ்சாகக் கூறலாம்.

இல்லறம் துறவறம் என்பன அடுத்தடுத்த நிலைகளாக இருந்தாலும், துறவறத்திற்கு முந்தியதாக ஒரு நிலையினைக் குறிக்க இடமுண்டு. திருவள்ளுவர் காலத்தில் நாட்டையும் நாட்டு மக்களின் நடைமுறைகளையும் காக்கும் பொறுப்பு மன்னவன் கையில் இருந்தது. குடும்பத்தைக் காக்கும் பொறுப்பை இல்லறத்தான் மேற்கொண்டிருப்பது போல நாட்டைக் காக்கும் பொறுப்பை மன்னவன் மேற்கொண்டிருந்தான். துறவறத்தில் கனியைப்போல முதிர்ந்து தோன்றிய அருளென்னும் மனிதப் பண்பு, துறவறத்திற்கு முந்தியதாகக் கூறத்தகும். நாட்டையாளும் துறையில் "கண்ணோட்டமாக" வுள்ளதைக் காணலாம். பழங்காலத்தில் மன்னவனுக்கிருந்த ஆளும் பொறுப்பு இன்று எல்லா மக்களுக்கும் பொதுவாக்கப்பட்டிருக்கின்றது. எல்லா மக்களுக்கும் நாட்டையாளும்படியான வாய்ப்புண்டு. இந்நிலையில் இல்லறத்திற்கு அடுத்ததான அரசியல் துறையில் வேண்டுவதாய கண்ணோட்டமும் எல்லா மக்கட்கும் வேண்டும் என்பது கூருமலே விளங்கும். இதுகாறுங் கூறியவாற்றல் ஒரு காலத்தில் இன்னதென்றே தெரியாதிருந்த மனித ஆற்றல் தொடக்கத்தில் காதல் என்னும் பெயரால் அரும்பிப் போதாகி மலர்கின்றது; இரண்டாம் நிலையாகிய இல்லறத்தில் அன்பென்னும் பெயரால் பிஞ்சாகி உருவடைகின்றது; மூன்றும் நிலையாகிய அரசியலில் கண்ணோட்டம் என்னும் பெயரால் காயாகின்றது; இறுதி நிலையாகிய துறவில் அருள் என்னும் பெயரால் பழுத்துக் கனியாகின்றது என்பது போதரும்.

ஓதும் அருளுடைமை உள்ளன்பின் பின்விளைவே<br>
காதல் அதற்குமுதற் காரணமாம்—நீதியுடன்<br>
மண்ணளு வோர்க்கருள்தான் வாய்க்குமெனி னுங்கதற்குக்<br>
கண்ணோட்டம் மூலமெனக் காண்.

சென்ற இதழின் தொடர்ச்சி

# தமிழ் இலக்கிய மரபுகள்.

இரா. இளந்திரையன், B. A. Hons.

குறிப்பிட்ட ஒரு நிலத்தில் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியே-ஒழுக்கமே நடைபெறுவதற்கான சூழ்நிலை மிகுதியால் அது அந்நிலத்தில் நடைபெறுவதாகக் கற்பித்துக் கூறப்படுகின்றது. அந்நிலக் கருப் பொருட்களெல்லாம் அந்த ஒழுக்கத்தைப்பற்றிக் கூறுதற்கு உறுதுணையாயமைகின்றன.

பொழுதுகளிலும் இன்ன பொழுதில்தான் மகிழ்ந்திருக்க வேண்டும், இன்ன பொழுதில்தான் துயருற வேண்டும் என்ற வரையறையில்லை எனினும் குளிர் காலத்தில் கூடியிருக்க வேண்டுமென்ற அவா தோன்றுதலையும், வெயில் காலத்தில் வறட்சியின் கொடுமை மிகுதலையும் இன்னும் இவைபோன்ற பிறவற்றையும் கருத்துட்கொண்டே, இன்ன நிலத்தில் இன்ன ஒழுக்கம் இன்ன பொழுதில் நடைபெறும் எனக் கற்பித்துக் கூறப்படுகின்றது. பொழுதமைப்பும் கருப் பொருள்களைப் போலவே கூறப்படுஞ் செய்தியின் முறையான வளர்ச்சிக்கும் அதன் முழுமைப் பேற்றுக்கும் காரணமாக அமைகின்றது. இவ்வாறான சில வரையறைகளை அமைத்துக்கொள்வதனல் இலக்கியத்தின் பரந்துபட்ட தன்மை சில குறிப்பிட்ட எல்லைகளுக்குள் அடங்கி எழில் சிறக்கின்றது; பலவேறு வகைப்பட்ட இலக்கியங்களும் அமைகின்றன; அவை ஒவ்வொன்றுக்கும் தனித் தன்மையும் கிடைக்கின்றது. அவ்வவ்வுணர்ச்சிகளும் செயல்களும் தத்தம் எல்லைகளில் நிற்பதுபோன்ற உணர்ச்சியையும் அவ்விலக்கியங்கள் கற்போருக்கு ஊட்டுகின்றன.

இனி, வருணனையிலும் மரபு பின்பற்றப்பட்டு வந்துள்ளது. ஓர் இயற்கைக் காட்சியை வருணிப்பதெனில் இன்னின்ன முறைகளில்தான் அதனை வருணிப்பது என்ற மரபு இருந்துள்ளது. இன்னின்ன பொருட்கள்தாம் அதிலே கூறப்படலாம் என்ற எல்லைகளெல்லாம் இருந்துள்ளன. பேசும் கிள்ளையும் பாடும் குயிலும் வீசும் தென்றலும் ஆடும் மயிலும்தான் இன்பமான சூழ்நிலையில் அதிகமாகக் கூறப்பட்டிருப்பதைப் பல இலக்கியங்களிலும் காணுகின்றோம். இவை யாவும் இயற்கையோடு பெரிதும் ஒத்திருப்பினும் மரபின் பிடிக்குள்ளேயே புலவர்களின்

கற்பனை சிக்கி யிருந்தமை புலனும். இதேபோல் ஓர் ஆணையோ பெண்ணையோ வருணிப்பதென்றாலும், ஒரு நாட்டையும் அதன் கூறுபாடுகளையும் வருணிப்பதென்றாலும் மரபின் படியே அவற்றைச் செய்யும் வழக்கம் தமிழில் மிகுதி. முடிமுதல் அடிவரை அல்லது அடிமுதல் முடிவரை வருணிப்பதிலும், ஒவ்வோருறுப்புக்கும் குறிப்பிட்ட பொருளே உவமையாகக் கூறப் படுவதும் நோக்கத்தக்கது.

பேச்சு மரபும் மிக அதிகமாக இருந்துவந்த ஒன்று குறிப்பிட்ட ஒரு பாத்திரம் இன்னின்னவர்களோடுதான் பேசலாம்; இன்னின்ன நேரங்களில்தான் பேசலாம்; இன்னின்ன முறைகளில்தான் பேசலாம் எனும் வரையறைகள் தமிழில் மிக அதிகமாக இருந்துள்ளன. நம் அகத் தமிழ்ப் பாட்டுக்களின் அடியில் தரப்பட்டுள்ள குறிப்புக்களில், தோழி கூற்று, செவிலி கூற்று, தலைவி கூற்று, பாணன் கூற்று என்பன போன்ற செய்திகள் காணப்படும். இவை பாட்டிற்கு இன்றியமையாதவை: இவை இல்லாவிடில் சில பாட்டுக்களின் பொருள் முற்றிலும் மாறுபட்டுவிடும். பாட்டிலோ எனில் தலைவன் கூற்றுக்கும் பாங்கன் கூற்றுக்கும் வேறுபாடே இல்லாத இடங்களும்; தோழி கூற்றும் தலைவி கூற்றும் ஒன்றுபட்டே காணப்படும் இடங்களும் பல உண்டு. அவற்றை மரபு பிறழ்ந்துகொண்டுவிட்டால் பாட்டின் செய்தியும் பழந்தமிழர் நாகரிகமும் அடியோடு மாறிப்போவதைக் காணலாம். எனவே அவ்விடங்களிலெல்லாம் பழைய மரபுகளைப் பின்பற்றிச் சென்றே பயிலவேண்டும். இன்றேல் அவ்விலக்கியத்தின் உயிர்நிலையை அறிந்து இன்புற இயலாது; அவ்விலக்கியம் தோன்றிய சமூகத்தையும் அறிய இயலாது.

இதுகாறும் கூறியன போன்றே சின்னஞ்சிறு மரபுகள் வேறு சிலவும் உண்டு. சங்கப் பாடல்கள் யாவும் பெரிதும் ஒன்றையொன்று ஒத்துக் காணப்படுதல் போலவே பிற்காலத்திய சிற்றிலக்கியங்களாகிய பிரபந்தங்கள் ஒன்றைப்போல் ஒன்று இருப்பதைக் காணலாம். இதற்கெல்லாம் மரபைப் பின்பற்றி அவை எழுதப்பட்டமையே காரணம். தல புராணங்களில் பொருட் சிறப்பைக்கூட மரபு தின்று ஏப்பமிட்டுவிட்டதன்றோ? அத்துணைக் கடுமையாக அவர்கள் மரபைப் பின்பற்றியுள்ளனர்.

இக்காலத்தில் இலக்கியம் மரபை உதறித்தள்ளிவிட்டதென்றும் அதனால் இலக்கியத்தின் தரம் குன்றிவிட்டது என்றும் கூறுவார் உளர். அவர்கள் அவ்வாறு கூறுவதற்குப் பழைய இலக்கியங்களின் மேல் அவர்கட்குள்ள அதிகமான அன்பே

காரணமாகும். மரபுகள் பின்பற்றப்பட்ட பழைய இலக்கியங்கள் சொற் சுருக்கமும் செறிவு முடையனவாக இருக்கின்றன என்பது உண்மையே. ஆனால் மரபைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றியதால் ஏற்பட்டுள்ள தீமைகள் மிகப்பல என்பதையும் நாம் உணரவேண்டும். சொல் மரபு எந்தக் காலத்தும் நீங்காத — நீக்கமுடியாத ஒன்று. ஆனால் பொருள் மரபு முதலியன அதிகமான கட்டுப்பாடுகளை விதிப்பதை எப்போதும் ஏற்றுக்கொள்வதற்கில்லை. பிற மரபுகளிலும் பெரும்பாலானவை மறைந்து விட்டன; அவை மறைந்தேயாதல் வேண்டும்.

திணைப் பாகுபாடுகளும் நிலப்பாகுபாடுகளும் இல்லாத இக் காலத்தில் அவை இடம் பெறுதல் இயலாது. இடம் பெற்றால் வெறும் செயற்கைச் சட்டமாகவே அது கருதப்படும். அதனால் சுவையும் மிகாது. மரபுகள் காலப் போக்கில் மாறுபடும் இயல்பின என்று முன்னரே கண்டோம். வழக்கை ஒட்டி ஒரு சில மரபுகள் இலக்கியங்களில் இடம் பெற்றே தீரும். அவ்வாறமைதல் இயல்பானது: அதனை முழுவதுமாக அகற்றிவிட இயலாது. அவற்றைப் பெருங் குற்றமாகக் கருத வேண்டியதுமில்லை.

சமூக வளர்ச்சியோடும், கருத்துக் கலப்புக்களோடும் இணைந்து மாறி வளரவியலாத மரபுகளை இலக்கியப் பயிரின் விட்டில்கள் என்றே கொள்ளுதல் வேண்டும். அவை இலக்கியத்தை எதிர்கால மக்கட்குப் பயன்படாத செல்லாக் காசாக்கிவிடுகின்றன. அன்றியும் பெரும்பாலான மரபுகள் இலக்கியத்தை மக்களிடமிருந்து பிரித்து விடுகின்றன. மரபுகளுக்குள் கட்டுண்டு கிடக்கும் இலக்கியத்தைக் கற்க வேண்டுமானால் மரபுகளை முதலில் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு தெரிந்து கொண்டு இலக்கியத்தை ஊன்றிப் படிக்கும் ஆர்வமும் வாய்ப்பும் எத்தனை பேருக்கு இருக்கமுடியும்? இலக்கியம் படிப்பது ஒரு சிரமமான வேலை என்ற உணர்வையன்றோ ஊட்டி விடுகின்றன மரபுகள்! இலக்கியத்தைப்பற்றிக் கூறிய பெரியோர் அத்தனை பேரும், அது சமூகத்துக்கு இன்றியமையாததென்றும், மக்களுக்கு இனிமை தருவது அதன் தலையாய நோக்கமென்றுமே கூறியுள்ளனர். இக்கூற்று உண்மையானால், இலக்கியம் எல்லாரும படித்துச் சுவைக்கக் கூடிய முறையில் — பொதுவான அடிப்படையிலன்றோ அமைய வேண்டும்? மக்களுக்குப் புரியாத மரபுகளைப் புகுத்துவதனால் மக்கள் இலக்கியத்தை நாடிவர அஞ்சுகின்றனர். வந்தாலும் மரபு அறியாத அவர்கள் அதில் என்ன இனிமைதான் காண இயலும்? மேலும் மரபுகள் எப்போதுமே இலக்கியத்தைக் குறிப்பிட்ட நிலப் பரப்புக்குள் கட்டுப்படுத்தி விடுகின்றன. உலகக் கூட்டுறவையும்

உலக ஒருமையையும் தோற்றுவிக்க வேண்டிய இலக்கியம், தன் பயனை ஒரு குறிப்பிட்ட பகுதி (Regional) மக்களுக்கு மாத்திரம் தான் கொடுப்பது பொருந்தாதன்றோ?

சில மரபுகளை வைத்துக்கொண்டு ஒரு செய்தியைச் சொல்லுவதாயின் சில சொற்களடங்கிய கவிதையிலேயே அதைக் கூறிவிட இயலும். மரபுகள் இல்லாவிடில் இலக்கியம் விரிந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படும். அனால் மரபு என்ற ஒன்று, (சிறிய கவிதையில்) கூறப்படாத சூழ்நிலைகளையும் பிறவற்றையும் அமைத்துத்தர அக்கவிதை குறிப்பிட்ட செய்தியை மாத்திரம் சொல்லிவிட்டுச் செல்லுகின்றது. மரபுகளில் ஊறித் திளைத் திருக்கும் சுவைஞன், கவிதை சுருங்கச் சொல்லி விளங்க வைத்துவிட்டது என்று எண்ணிக் கொள்ளுகின்றான். கவிதையில் கூறப்படாத விவரமான சூழ்நிலையை அவன் உள்ளத்தில் மரபு தோற்றுவித்திருந்ததனாலேயே அக் கவிதையை அவனால் சுவைக்க முடிந்தது. அதே கவிதையை மரபு அறியாத ஒருவன் பாராட்ட வேண்டுமானால் அம் மரபுபற்றிய முழு விவரத்தோடு அச்செய்தி கூறப்படவேண்டும். மரபுபின் பற்றப்படாதபோது எல்லாமே எழுத்தில் எழுதியாகவேண்டும்; அது விரிந்துசெல்லுகிறது. மரபு பின்பற்றப்படும்போது ஏட்டில் உள்ளதைப் போன்ற பல மடங்கு செய்திகளை உள்ளத்தில் எழுதவேண்டியுள்ளது. எனவே எழுத்தில் சுருக்கமாயினும் உண்மையில் அதுவும் நீளமானதே யாகும். மேலும் மரபு பின்பற்றப்படாத இலக்கியத்தை எல்லாரும் எப்போதும் கற்கலாம்; மரபுக்கட்டுக்களுள் அடங்கிய இலக்கியம், — செல்வம், இன்பம் முதலியன சிலருக்கே உரிமையாகிவிட்டது போல் — வழி வழியாக அல்லது புதிதாக முயன்று இலக்கியம் கற்ற ஒரு சிலருக்கே இன்பம் தருகின்றது. எனவே இலக்கியம் எல்லார்க்கும் இன்பமும் பயனும் தரவேண்டுமாயின் அதன் மரபுகள் பெரும்பாலும் அகல வேண்டும். காலத்தாலும் இடத்தாலும் மாறுபட முடியாத சில பொருள் மரபுகள் மாத்திரம் இலக்கியத்தில் இடம் பெறலாம். ஏனைய மரபுகள் மறைந்தேயாதல் வேண்டும். மரபுகள் போனால் சொற்சுவை போய்விடும், பொருட்சுவை போய்விடும் என்பதெல்லாம் பழமை மேற்கொண்ட கழிபெருங் காதலால் சிலர் கூறுவனவே யன்றி வேறில்லை. பொருள் இன்றி இலக்கியமில்லை; பொருளுள்ளவரை சுவை இல்லாது போய்விடாது. எனவே இலக்கியம் காலத்திற்கும் இடத்திற்கும் ஒரு சிறு புன்முறுவல் செய்துவிட்டு, அவற்றின் வளர்ச்சி, பெருக்கம் ஆகியவற்றைத் தழுவிக்கொண்டு வளர்தல் வேண்டும்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

# புயல்.

ஆசிரியர் : செகப்பிரியர்.

மொழிபெயர்ப்பாளர் : புலவர். R. ஏகாம்பரநாதன்.

## அங்கம்—4. களம்—1.

**கலியன் :—** அற்ப உடைகளில் ஆசை எதற்கு? திருக்கு, அரசாங்கம் வரும்போது ஆடையில் உனக்கென்ன பைத்தியம்?

**கணேசன் :—** அடே, திருக்கு அந்தச் சட்டையில் கை வைக்காதேடா. அது அரசன் போட்டுக்கொள்ளவேண்டிய சட்டை. அது என்னைச் சேர்ந்தது. எனக்காகவே இருக்கிறது. அதை இன்னொருமுறை தொட்டால்.........

**கலியன் :—** நீங்கள் துணிக்காகச் சண்டை போட்டுக் கொண்டால் இவ்விரைச்சலில் அக்கொலைகாரன் விழித்துக் கொள்வான். நீங்கள் கொலை செய்யவும் முடியாது. இராசா ஆகவும் முடியாமல் போய்விடும். அல்லாமலும் நம் மூவரையும் பிடித்துக் காலில் போட்டு மிதித்துக் கசக்கிவிடுவான்.

**கணேசன் :—** அடே, கலியா கொடியில் உள்ள துணிகள் நம் தலைக்குமேல் இருக்கின்றன. எடுத்து உடுத்திக்கொண்டால் நம்முடன் சமமாக இருக்கும். ஆனால் அரசன் உடைகள்போக மற்றத் துணிகளை நீங்கள் இருவரும் வேண்டிய அளவு எடுத்துக் கொள்ளுங்கள். பாக்கி ஒன்றும் நம் தலைக்குமேல் இருக்கக் கூடாது. நம் காலடியில் கிடத்தி எங்காவது ஓரிடத்தில் மறைத்துவைத்துவிடவேண்டும்.

**திருக்கு :—** துணியை மறைத்து வைக்கும் திருட்டுத் தனம் எனக்குப் பிடிக்கவில்லை. அரசன் கட்டளையாக இருந் தாலும் எனக்கு இது பிடிக்கவில்லை.

**கலியன் :—** எனக்குத் துணி வேண்டாம். நம் காலம் வீணாகப்போகின்றது. கொலை செய்தால்தான் மந்திரம் தொலையும்.

**கணேசன் :—** திருக்கு நமது அரசாங்கத்தில் புத்திசாலி களுக்கு அடிக்கடி வெகுமதி கொடுக்கப்படும். தொழிலுக் கெல்லாம் வரியுண்டு. தலைக்குமேல் இருந்த துணிகளைக் கீழே தளர்த்தும் தொழிலுக்குத் தொழில் வரியாக அத் துணிகளில் சிலவற்றை கருவூலத்தில் வைக்கச் சொன்னேன். இதனை நீ திருட்டென்று சொன்னால் உனக்கு வெகுமதியே

கிடையாது கலியா, உன் விரலிலும் உடம்பிலும் பிசினைத் தடவிக்கொண்டு வேண்டிய துணிகளை ஒட்டிக்கொள் அப்பத் தான் நழுவாமல் இருக்கும்.

**கலியன் :—** வேண்டாம், எனக்கு வேண்டாம். காலம் வீணுகின்றது.

**கணேசன் :—** ஏ, திருக்கு நான் சொல்வதைக் கேள். துணிகளைச் சுருட்டு. நான் அரச உடைகளை அணிந்துகொள் கிறேன். மீதித் துணிகளை நமது அரசாங்கக் கருவூலத்தில் மறைவாக வைக்கவேண்டியதுதான். இந்தா எடுத்துக்கொள்.

(சயசிலன் திட்டப்படி வேடர் பல வேட்டை நாய்களுடன் வருகின்றனர்).

**வேடன் :—** நாய்களை ஏவி — ஏ, கறுப்பு நீ போய் கலிய னின் கழுத்தைப் பிடி. ஏ, புலி நீ சென்று கணேசனின் தொந்தியைப் பிராண்டு. ஏ, கோம்பை நீ போய் திருக்கின் கெணடைச் சதையைக்கடி. மூன்று பேரும் ஓடுகிறூர்கள் – விடா தீர்கள், எலும்பு நொறுங்க விரட்டுங்கள். இரத்தம் காணுமல் விடாதீர்கள். ஆனால் உயிருக்கு அழிவுவரக்கூடாது என்பது சயசிலனின் உத்தரவு. தலைவர் சொற்படியே தான் நாம் நடக்க வேண்டும்.

**சயசீலன் :—** காத்தவா, உன் இனத்துக்கும் உனக்கும் இனி விடுதலைதான். இன்னும் சில அலுவல்கள் உன்னால் முடிக்கப்படல் வேண்டும். பிறகு விடுதலைதான்.

## அங்கம் 5. களம் 1.

(சயசிலன் வீட்டிற்குமுன் — மந்திரக் கருவிகளுடன் இரு ந்துகொண்டு சயசீலன் காத்தவனுடன் உரையாடல்.)

**சயசீலன் :—** எனது எண்ணங்கள் கைகூடவும் — மந்திர ங்கள் பலிக்கவும் – யாவரும் கீழ்ப்படியவும் – அனைத்தும் நன்மை யாக முடிகின்றன. உனக்கு விடுதலை தந்தனுப்ப வேண்டியது தான். கடலில் புயல் காற்றைக் கிளப்பியபோது விரைவில் உனக்கு விடுதலை தந்தனுப்ப எண்ணியிருந்தேன். ஆனால் இன் னும் சற்றுப் பொறுத்துக்கொள். கப்பலில் வந்தவர்கள் அனை வரையும் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியவனுக இருக் கிறேன்.

**காத்தவன் :—** அனைவரும் நலமே. ஆனால் கப்பலில் வந்தவர்கள் பலவிடங்களில் பிரிந்து கிடக்கின்றனர். ஓரிடத்

தில் உள்ளவர் மற்ற இடத்தில் உள்ளவரைப்பற்றி ஒன்றும் அறியாத நிலையில் இருக்கின்றனர். தாங்களாக விடுதலை செய்யாவிட்டால் அவரவரும் ஆயுள் தண்டனையாளராகவே இருக்க வேண்டியதுதான் அரசர் இராசேந்திரரும் அவர் தம்பியும் பித்தம் பிடித்தவர் போலவே இருக்கின்றார்கள். இல்லாவிட்டால் அவர்கள் இறந்தே போயிருப்பர். எனினும் சிற்சில சமயங்களில் கண்ணீர் வடியத் துன்பக்கடலில் தோன்றுகிறார்கள். தங்கள் அன்பர் கோவிந்தமாறர் தமது கிழ உடலிலிருந்து பெரிய அருவியையே உண்டாக்கி விடுகிறார் தனது ஒழியாத அழுகையால். தாங்கள் நேரில் பார்த்தால் மந்திரக் கருவிகளை எறிந்துவிட்டு அருவி ஆறாகுமாறு சேர்ந்து அழுதுகொண்டிருப்பீர்கள்.

சயசீலன் :— காத்தவா, நீ அவ்வளவுக்கு உணர்கின்றாயா?

காத்தவன் :— நான் மனிதப் பிறவியாக இல்லாத காரணத்தால் தான் இங்குவந்து தங்களிடம் அதுபற்றிப் பேசுகிறேன். இல்லாவிட்டால் அங்கேயே அழுதுகொண்டு கிடக்கவேண்டியது தான்.

சயசீலன் :— நீ ஒரு ஆவி உனக்கு எம்மைப்போல் உணர்ச்சி இராதென்பது உண்மையாக இருந்தும் அதுபற்றி நீ தெளிவாகப் பேசுகிறாய். மற்றொரு முறை பார்த்தால் உனக்கே கண்ணீர் தோன்றிவிடும்போல் தோன்றுகின்றதே. அவர்களைப் போல உண்டு, உடுத்து, களித்துத் தூங்கும் நான் அவர்களைப் பார்த்தால் எவ்வளவு வருந்த நேரும்? ஆனால் அவர்கள் செய்த பிழையைத் திருத்துவதற்காகவே இப்பொறுப்பு ஒரு வகையில் என்னைச் சார்கிறது. மற்றொரு வகையில் எனது அறிவு அதனை மாற்றி மன்னிக்கத் தூண்டுகின்றது. பழிக்குப்பழி வாங்குவதினும் இரக்கம் காட்டி மன்னிப்பதுதான் சிறந்த பண்பாடு. கண் தகர நூறினும் கரும்பு இன்சுவையே தரும். நானோ அந்த அஃறிணையினும் மாறாக நடந்துவிட்டேன். மேலும் அவர்களே தாம் செய்த பிழையை உணர்ந்த பின்னரும் நான் அவர்களை விடுதலை செய்து நன்னிலையில் வைக்க முற்படாதது தவறாக முடியும். மந்திர சக்தி மனிதப் பண்பாட்டினைக்கூட மறக்கத் தூண்டும் என்பது கண்டு எனது மந்திரக்கருவிகளை வைத்திருப்பது தவறாகும். மந்திர சக்தியும் நீயும்கூட மனிதர்களை அடக்கவும் துன்புறுத்தவும் ஆற்றல் பெற்றிருப்பினும் மனிதனுக்கு அடக்கம்தான். முதலில் நான் எனது மந்திரக் கருவிகளை அழித்து மண்ணில் புதைத்து விடுகிறேன். மந்திர சக்தியையும் விலக்கி

விடுகிறேன். அவர்கள் இனித் தம் பழைய நிலைக்கு வந்துவிடுவார்கள். இனி யாவும் இயற்கையில் நடக்கும்.

**காத்தவன் :—** ஐயா, நான் சென்று அவர்களை அழைத்து வருகிறேன்.

**சயசீலன் :—** நீர் நிலைகளில் உள்ள பூதங்களே, எங்கும் நிரம்பியுள்ள ஆவிகளே, நிலவில் வயல்களில் கைகோத்தோடும் பேய்களே, காளான் குடைகளைக் கணத்தில் உண்டாக்கும் பிசாசுகளே, உங்கள் உதவி கொண்டு கருங்கடலையும் நீல விண்ணையும் சண்டையிட வைத்த நான் — இடி மின்னலை உண்டாக்கிய நான் — மரங்களைப் பிளந்த நான் — மலைகளை அசைத்த நான் — இறந்தவர்களை எழுப்பிய நான் — எனது மந்திர சக்தியை இன்று கருவிகளை ஒழித்ததின் மூலமாக விலக்கிவிட்டேன். இனி யாவரும் ஒருபடித்தாக ஓரினமாக வாழ்வோமாக.

(காத்தவராயனுடன் இராசேந்திரன் — வீரராசேந்திரன் — அமணன் — கோவிந்த மாறூர் — ஆதிநாராயணன் — வருதல்)

**சயசீலன் :—** கோவிந்தரே, உமக்கு இவ்வளவு தொல்லை ஏற்பட்டிருக்கக்கூடாது. அது சேர்க்கைக் குற்றம் போலும். இனி உமக்கு மயக்கம் நீங்கித் தெளிவு உண்டாகவேண்டியது தான். கோவிந்தரே தாங்கள் மதிப்புமிக்க தொண்டு செய்தீர்கள். உங்களை நான் வாழ்த்துகிறேன். உம்மை உலகம் புகழும். அமணன் என்னையும், எனது சிறுமியையும் கொடுமையாக நடாத்தியதற்குப் போதிய துன்பம் அனுபவித்தாயிற்று. கணேசன் முதலிய யாவரையும் நான் மன்னித்து அன்பு காட்டுகிறேன். நிறைமதியன்று கடல் பொங்கிக் கரையுடன் இணைந்து தவழ்வது போல் உங்கள் உணர்ச்சி பொங்கி என்னுடன் இணைந்து தவழ்கின்றது. காத்தவரே, உமக்கு முன்நிற்பது ஒரே அலுவல். அது முடிந்ததும் விடுதலைதான். கப்பலில் உள்ள தலைவன், மாலுமிகள், மற்றைய இடங்களில் மயங்கிக்கிடப்போர் அனைவரையும் அழைத்துவரல் வேண்டும். அன்புடையோர்களே, நீங்கள் அனைவரும் என்னை நன்கு தெரிந்துகொள்ளுமாறு எனது உடையுடன் வருவேன். (சயசீலன் எழுந்து செல்லுதல்)

**கோவிந்த மாறூர் :-** இவ்விடத்தில் சுகம், துக்கம், ஏமாற்றம் வியப்பு, மாயம், மந்திரம் எல்லாம் நிறைந்து நம்மைக் குழப்புகின்றன என்னளவில் உண்மையில் மிகவும் குழப்பம்தான். தெய்வமே இத்தீவுக்கு வரக் கருணைசெய்த நீ, வேறொரு நல்ல குழப்பமற்ற, இடத்துக்கு நாங்கள் செல்ல ஏதாவது வழி செய்யமாட்டாயா?

**சயசீலன் :—** (தன் பழைய உடையுடன் பேசுதல்) — அன்பர்களே, வஞ்சி மன்னன் இன்னும் உயிருடன் தான் இருக்

கின்றேன். யாருக்கும் ஐயம் வேண்டாம். நீங்கள் எனது இருப்பிடத்துக்கு வந்தீர்கள். நான் உங்களை வரவேற்றேன். நீங்கள் என்னுடன் கலந்துள்ளீர்கள் என்று நம்புகின்றேன்.

அமணன் :— தங்களை முதலில் நான் ஒரு மாயாவியாகவே நினைத்தேன். இத்தீவுக்கு வந்து பல ஏமாற்றங்கள் அடைந்தேன். (கையைப் பிடித்துக்கொண்டு) அண்ணு உங்கள் நாடித் துடிப்பு மக்களின் தன்மையில் நடக்கின்றது. நான் தங்கள் முகத்தைப் பார்த்தது முதல் எனது தீய எண்ணங்களும் பாவச் செயல்களும் ஒவ்வொன்ருய் நழுவத் தொடங்கிவிட்டன. எனது நிலைமையை என்னுல் விரித்துச் சொல்லவே இயலாது. அதைச் சொன்னுலும் சமூகத்துக்கு வேண்டாத ஒரு கதையாகவே இருக்கும். அண்ணு, தங்கள் அரசாங்கத்தைத் தாங்களே ஒப்புக்கொண்டு என்னை மன்னித்துக் காப்பாற்றுங்கள். ஆனுல் தாங்கள் இத்தீவினை அடைந்த விதத்தை மட்டும் எனக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

சயசீலன் :— கோவிந்தரே, உம்மை நான் சொற்களால் எவ்வாறு பாராட்ட முடியும்! அருகில் வந்து உட்காருங்கள்.

கோவிந்த மாருர் :— தாங்கள் எனது தலைவர்தான் என்பதனை என்னுல் இன்னும் நம்பமுடியவில்லையே?

சயசீலன் :— இன்னும் இத்தீவின் மாயை அகலவில்லையா? வெளிப்படையாக நிகழ்வதெல்லாம் இத்தீவில் கனவு போல் தோன்றுகின்றதா? கனவு நிலைப்படியாகத் தெளிவு தரும். அன்பர்களே, இராசசிம்மனும், அமணனும் எனக்குச் செய்த துரோகத்துக்கு அரசியல் முறைப்படி, கடுந்தண்டம் தருதல் வேண்டும். ஆனுல் மன்னித்தேன். அரசாங்கத்தைப் பெற்றுக் கொள்ளுதல் மூலமாக நான் வஞ்சி மன்னன் என்ற முறையில் மன்னிப்பை உறுதி செய்துவிட்டேன்.

இராசேந்திரன் :— ஐயா, தாங்கள் மீண்டும் வஞ்சியரசராகி மன்னித்தீர்கள் குற்றவாளிகளை யெல்லாம். அது மகிழ்ச்சிதான். ஆனுல் மகனை இழந்த எனக்கு என்ன ஆறுதல் கூற முடியும்? என்னுல் பொறுக்க முடியவில்லையே.

சயசீலன் :— நாம் உடலெடுத்தது இன்பம் துய்ப்பதற்காக வல்ல. தழைத்த மரத்தின் ஊடே தோன்றும் சிற்சில காய்கள் போல துன்பத்தழைப்பின் ஊடே தோன்றும் சிற்சில இன்பங்களில் செருக்குக் கொள்ளாது துன்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கே தான். மகனை இழந்தமை தங்களால் பொறுக்கமுடியவில்லை யென்ருல் மகளைப் பிரிந்துள்ள எனது நிலைமையைக் கண்டாவது தாங்கள் மாறுதலடையலாம் அல்லவா? (தொடரும்.)

# கரந்தைக் கோவை.

[ வித்துவான், ச. பாலசுந்தரம். ]

### பகலினும் இரவினும் பயின்று வருசென்றல்.

239 நல்லந் துவன்கலிப் பாத்தொகை நாடி நயமறிந்து
சொல்லுந் தமிழ்க்கரந் தைமகிழ் தோன்றல்! தொடர்பகையை
வெல்லும் பொழுதறி வாயுனே வேண்டி மெலியுமவர்க்
கல்லும் பகலும்வந் தன்புசெய் தாற்பிழை யாவதென்னே?

குறிப்பு :- சென்ற இதழில் 239 என்ற எண்ணுள்ள பாடல் பகலினும் இரவினும் அகலிவண் என்ற துறைக்குரியது. 239, 240, 241 என்ற எண்ணுள்ள பாடல்களே முறையே 240, 241, 242 எனத் திருத்திக்கொள்க.]

### ஆற்றாத் தன்மை ஆற்றக் கூறல்.

243 இருக்கும் எழும்விழும் ஏங்குபுன் னீரை இருவிழியும்
பெருக்கும் உடல்பசப் பாகும் பிறரிடம் பேசுமொழி
சுருக்குந் துருத்தியைப் போன்றுயிர்க் கும்முயிர்த் தோகையினே
உருக்குந் துயரறி வாய்க்கரந் தைந்தமிழ் உத்தமனே.

### காவல் மிக உரைத்தல்.

244 தினேக்காவல் பூண்டவச் சேயிழை யாளேச் செவிலியுடன்
மனேக்காவல் பூண்டனள் அன்னேமுன் மூவர் வளர்த்ததமிழ்
தனேக்காவல் பூண்டவர் தாங்குங் கரந்தைத் தலேவஇனி
உனேக்காவல் பூண்டவள் உள்ளம் உவப்பதை உன்னுகவே,

### இதுவுமது.

அருளேத் தருந்திரு அப்பர்சம் பந்தர்ஆ ரூரர்தமிழ்ப்
பொருளேத் தெரிந்தொளி பூக்குங் கரந்தைப் புகழ்த்தலேவ!
பொருளேத் தவிர்த்தன்னே பொன்காவல் மேவிப் புவியுறங்கும்
இருளேப் பகல்செய எண்ணினள் செய்வதென் ஏழையரே ?

### காமமிக வுரைத்தல்.

245 பஞ்சினும் மெல்லடிப் பாவையைக் காமப் பகைநெருங்கி
அஞ்சிடக் கான்வளர் தீயெனப் பற்றுநின் ஆகமெனும்
மஞ்சுறு நீரையல் லாற்கனல் மாற்றும் மருந்திலேவாழ்
விஞ்சையிற் கூர்தமிழ் மேவுங் கரந்தையில் வேலவனே.

---

244. மனேக்காவல் - இற்செறிப்பு. மூவர் - தேவார ஆசிரியர், மூவேந்தர். உள்ளம் உவப்பது-வரைந்தெய்துவது. 245 மனேயிலுள்ள பொருள்களேக் காவல் செய்யாமல் திருமகள் போன்ற தலேவியைக் காவல் செய்தாள் என்றபடி. இருளேப் பகல்செய்தல்-உறங்காமை. கான்வளர்தீ-காட்டுத்தீ. மஞ்சு-கார்மேகம். கனல்-விரகத்தீ. விஞ்சை-கலே.

### கனவு நலிபுரைத்தல்.

246 பாங்கா னவர்க்கருள் பைங்கரந் தைத்தமிழ்ப் பண்புடையோய்!
தூங்கா தவளுடற் சோர்வால் விழிகள் துயிலமையும்
பாங்கா யிருந்தருள் பாலிப்ப தாகவப் பஞ்சணையை
நீங்கா தணைத்துபின் நெட்டுயிர்ப் பாள்நினை வல்லவென்றே.

### கவினழி புரைத்தல்.

247 வணங்கினி தேத்தநல் வாழ்வளித் துள்ளம் வளர்த்தறிவை
மணங்கொளச் செய்ந்தமிழ் வாழ்கரந் தைப்பதி மன்னவ!முன்
அணங்குறு நல்லெழி லின்னுரு வோவென ஐயமுற்ற
சுணங்கணி தோகையை இன்றுகண் டாலுந் துணிவரிதே.

## 17. ஒருவழித் தணத்தல்.

### தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றல்.

248 வண்ணம் புலப்பட வேண்டியோர் சொல்லை வகையுளியாய்ப்
பண்ணுங் கரந்தைநற் பாவலர் போலென் பதிபுகுந்து
பண்ணும் வினையுள தாலுயிர்ப் பாங்கிநம் பான்மொழிக்கென்
எண்ணம் புலப்படுத் தேகிமுன் மீளுவ னின்றிரவே.

### பாங்கி விலக்கல்.

249 படிக்குந் துறைதொறும் பண்பட்ட பாவலர் பைந்தமிழ்நூல்
வெடிக்குங் கரந்தையின் வேந்தனே யாய்நீ விரைந்துபதி
முடிக்குங் குறையுள தேலினி மொய்குழல் முத்தென நீர்
வடிக்குந் துயர்தெரி யாய்தெரி வேனுயிர் வாழ்வரிதே.

### தலைவன் நீங்கல் வேண்டல்.

250 நன்று புரிகரந் தைத்தமிழ் நூனயம் நாடலர்போல்
சென்ற மதியினை மீட்பதற் காயினும் சேர்ந்துபதி
நின்று வருதனன் ருமுயிர்ப் பாங்கிஎன் நெஞ்சமெனும்
மன்று ணடம்புரி வாளை மறந்துயிர் வாழ்கிலனே.

### தலைவனைப் பாங்கி விடுத்தல்.

251 நீயின்றி வாழாத நெஞ்சுடை யாளிடம் நின்பிரிவைப்
போயின்று சொல்லுமுன் பொல்லா வினைக்குறை போய்முடித்து
வாயின்று மாலையின் றேல்கரந் தைத்தமிழ் மாணவ!பின்
ஈயென்று காலனின் பாலவ ளாவி இரந்துகொள்ளே.

---

*246. நினைவல்ல கனவென்று விம்முவாள் என்றபடி. வணங்கி இனி தேத்த. உள்ளம் - உள்ளப்பண்பு. மணங்கொளல் - புகழாற் கமழ்தல். காட்சியில் அரிவையோ அணங்கோ என்றையுறச் செய்தவள் இப்போது அழகழிந்திருத்தலால் தலைவியோ பிறளோ என்றையுறச் செய்வாள் என்று கவினழிவு கூறினுள் 248. வண்ணம் - இசை (ஒரு செய்யுளுறுப்பு) வகையுளி - ஒரு சொல்லைப் பொருள் நோக்காது இசைநோக்கிப் பிரித்தல். மீளுவனின் றிரவே என்பது சாடு வாக்கியம். 249 வெடித்தல்-உணர்வாற் பொங்கிவருதல். 250. வினைகருதிச்சென்ற மதி.*

பாங்கி தலைவிக் கவன் செலவுணர்த்தல்.

252 சீரேறு செந்தமிழ் மாதவர் தெய்வத் திருமுறைநூல்
ஈராறு மன்புளத் தேற்றவர் வாழும் எழிற் கரந்தைப்
போரேறு போன்றவர் பூங்குழ லாய்த்தன் பதிபுகுந்து
காரேறு வான்மதிக் காலுமுன் மீளக் கருதினரே.

தலைவி நெஞ்சொடு புலத்தல்.

253 களித்தாய் மிகவவர்க் காண்டொறுங் காதற் கடறிளைத்தாய்
ஒளித்தாய் பிறர்க்கவர் நீங்கலர் வேட்கை உடையரெனத்
தெளித்தாய் கரந்தையிற் செந்தமிழ் கேளலர் சிந்தையென
விளைத்தாய் துயரெனக் கின்னும் உனக்கிது வேண்டுமன்றே.

சென்றோனீடலிற் காமமிக்க கழிபடர் கிளவி.

254 மொழிவளர்ப் பார்க்கிட மாங்கரந் தைப்பதி மொய்ம்பர்வரும்
வழிவிருப் பாலுளம் வாடுறு வேற்கொரு வாயுரையும்
கழிநிரைத் தார்கட லேகய லேவளர் கைதைகளே !
பழிவிருப் பான்மொழி யாதிருப் பீர்கொலென் பாவமிதே?

தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்,

255 ஆழ்வா ரருளமு தார்வார் கரந்தை அணிவரைமேல்
தாழ்வா ரலரவர் ஊழ்வருந் தண்டலை சார்ந்துமலை
சூழ்வா ரருவியிற் றேய்குவம் ஆடிநந் துன்பகல
வீழ்வா மவர்வழி மேனடப் போமினி மெல்லியலே.

தலைவன் வந்தமை பாங்கி உரைத்தல்.

256 பழுதகற் றுந்தமிழ்ப் பாவலர் சூழ்கரந் தைப்பதியைத்
தொழுதுறு வார்தமிழ்த் தூக்கறிந் தெண்சுவை துய்ப்பதுபோல்
பொழுதொருங் கேமகிழ் பூத்திருப் பாய்!புரி போரினிடை
எழுதெழில் மார்பரிங் கீண்டின ராதலின் ஏரிழையே.

வந்தோன் தன்னொடு நொந்து வினைதல்.

257 அன்னை மொழிமறம் நாடரும் பண்பை அவமதித்தார்
முன்னை யொழியமற் றியார்க்கு மருள்செய் முறைகரந்தைத்
தன்னை அடைந்தவர் தாமறி வார்துயர் தாங்ககிலாப்
பொன்னை மறந்ததென் பூந்தமிழ்ப் போற்றும் புரவலனே?

---

251. இன்றிரவு வரவில்லையேல் தலைவி உயிர்விடுவாள் என்றபடி. 252. காரேறுவான் - மாலைவானம். காலுதல் - ஒளிவீசுதல். 253. ஒளித்தாய்-காதலால் தோன்றிய வேறுபாடுகளை அலராகு மென்று கருதி மறைத்தொழுகினய். தெளித்தாய் - உறுதி கூறினய். 254. வாடுறுவேற்கு-வாட்டமுறும் எனக்கு. கழி-உப்பங் கழி. கைதை - தாழை. கேட்டார்க்கு விடை தாராமையால் வரும் பழி. 255. தாழ்தல் - தங்குதல். ஊழ்வருந்தண்டலை-தலைவன் முறையாக வந்து இன்புறுத்தியசோலை மலை-தலைவன் மலை. 256. பழுது-குற்றம். மும்மலம். தூக்கு-பாட்டு, உயர்வு எண்சுவை - வினைத்தொகை - எட்டுச் சுவை என்பதுமாகும். போரிடை எழுதெழில்-விழுப்புண்பட்ட அழகு.

**தலைவன் பாங்கியொடு நொந்து வினுதல்.**

258 மலருந் தமிழ்க்கொரு மாளிகை யாயுளம் மல்கிருளைப்
புலரும் படிச்செயும் பொற்கரந் தைத்தமிழ்ப் பூவையொப்பீர்!
அலரும் பிரிவுமிங் கேதுயர் செய்யவும் ஆற்றியிருள்
புலரும் வரையிலெவ் வாறிருந் தீரெனைப் போன்றுயிர்த்தே.

**பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்த அருமை கூறல்.**

259 ஒப்பிய னூறரும் கால்டுவெல் போப்பிவர் ஓர்ந்துணர்ந்தே
இப்புவி யோர்க்குரை செய்தமிழ் இன்புறு மோர்கரத்தை
உப்பிய லுங்கவி போன்றவட் கோரிடை யூறுமின்றிச்
செப்பிய சொன்னினைந் தேபுறங் காத்தனன் தென்னவனே.

## 18. வரைவிடை வைத்துப் பொருளவயிற் பிரிதல்.

**என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றல்.**

260 வள்ளற் கரந்தையில் வாழ்தமிழ் தேர்ந்த வணர்குழலாய்
உள்ளத் துறைவியென் இல்லத் திருந்தெனக் கோகைதர
அள்ளற் பழனம்விட் டேசுரம் போகி அரும்பொருளைக்
கொள்ளக் கருதுமென் கொள்கையெல் லாமுரை கோமகட்கே.

**இதுவுமது.**

மடியிம் மிடியுமி லாக்கரந் தைத்தமிழ் வள்ளுவர்சொல்
அடியும் முடியுமிங் கார்வதற் குத்துணை யாநடுவைப்
பொடியுஞ் செடியுமிக் கார்வழி போக்கிப் பெறப்புகுவேன்
கொடியுந் துடியுமொவ் வாவிடை யாளிடம் கூறுகவே.

**நின்பொருட் பிரிவுரை நீயவட் கென்றல்.**

261 நாமார நற்றமிழ் சேர்கரந் தைப்பதி நாவலனே!
நாமார ராவிடம் பாலிற் கலந்தென நங்கையென்பால்
ஏமார நன்பொருட் கேகுவன் சொல்லென் றியம்புவதேன்
ஏமார னுக்கெதி ரெய்ப்பா ளிடஞ்சென் றியம்புகவே.

---

257. அன்னையையும் மொழி முதலியவைகளையும் பழித்தாரிடம் அருள்செய்தலாகா தென்றபடி 258. உளமல்கிருள்-அறியாமை. உயிர்த்து எனத்தானும் பிரிவால் வருந்தியமை கூறினுன். 258. உப்பு-சுவை. செப்பிய சொல்-இன்னே வருவேன், காப்பாய் என்றவை. 260, இல்லத்திருந்து - மனைவியாய்க் கற்புக்கடம் பூண்டு. அள்ளல் பழனம்-சேறுமிக்க வயல். சுரம்-பாலை. மடி-சோர்வால் வரும் மறதி. மிடி-அறிவுப்பஞ்சம். அடி, நடு, முடி-அறம், பொருள், இன்பம். ஆர்தல்-நிறைதல். பொடி-சுடுமணல். செடி - மூட்புதர். (வேட்டுவராலுறு துன்பம்) துடி-உடுக்கை. 261. நாம் ஆர-நாம் துய்க்க. நாம்ஆர் அராவிடம்-அச்சம் பொருந்திய பாம்பின் நஞ்சு. ஏம்ஆர - இன்பத்தைப்பொருந்த (ஏமம்) ஏமாரான்-மலரம்புகளை உடைய மன்மதன். எய்ப்பாள்-இளைப்பாள், இது ஈரடிமடக்கு. 262. வீசும்-முன்னும் பின்னும்போய்

நீடேனென்றவ னீங்கல்.

262 ஊசற் கயிறென ஒள்ளிழை பாலென் உயிரிருக்க
வீசும் பலகையின் மீளுவன் வண்பொருள் மேற்பிரிவேன்
பேசற் கினியபல் பீடார் கரந்தையர் பேணுதமிழ்
வாசத் தொடை மகிழ் வீரங்கு நீடலன் வாட்டமுற்றே.

பாங்கி தலைவிக் கவன்செல வுணர்த்தல்

263 நுண்பொருட் பாவைநன் றேநுகர் தற்குநன் னூலிடையாய்
எண்பொருள் கோளறிந் தார்மணந் தன்னை இடைநிறுத்தி
ஒண்பொருள் சேர்கரந் தைத்தமிழ் போன்ற உனையடைய
வண்பொருள் கோள்புரிந் தேகினர் நாளை வருகுவரே.

தலைவி யிரங்கல்,

264 சீரார் கரந்தையிற் செந்தமிழ்க் காவியஞ் செய்யவல்லார்
ஏரார் திருவெனைப் போலுயிர்ப் பாவை இயற்றவுங்கல்
நீரார் எனத்தெரிந் தேன்பொருள் வேண்டியென் நெஞ்சழியச்
சாரார் எனச்சுரந் தாந்தனித் தேகிய தன்மைகண்டே.

பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்.

265 விருப்பாடு செந்தமிழ் மேவுங் கரந்தையின் வேலவரந்
நெருப்பாடு கானடந் தாருன் பொருட்டதை நேர்ந்திலைநீர்
கரப்பாடு கண்ணினைக் காட்டுவை யேலலர் காலுமிதைச்
சுருப்பாடு பூங்குழல்! சூழ்ந்தறிந் தாலொரு துன்புமின்றே.

தலைவி கடுஞ்சொற் சொல்லல்.

266 கண்டார் கருவிழி தீயும் கருதின் கருத்தெரியும்
வெண்டேர் தெரிகணை வேடர் திரிசுர வெம்மைகண்டும்
தொண்டார் கரந்தையிற் றேற்றுந் தமிழைத் துறந்தவர்போல்
கொண்டார் கழற்றுரைப் பெண்டிர் மதியையென் கூறுவதே?

வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல்.

267 நாடும் பொருள்வினை நற்கரந் தைத்தமிழ் நாவலர்சொல்
ஏடும் இயற்கையும் ஏறப் பயின்றவர் ஏகுநெறி
வாடும் பெடைக்குநல் வல்சிகொண் டூட்டிதன் வார்சிறகால்
மூடும் பருந்துகண் டால்வர வோவலர் மொய்குழலே.

---

வரும். 263. பொருள்கோள்-செய்யுளுள் சொற்களைப் பொருள் பொருந்துமுறையில் பிரித்து மாற்றிப் பொருள்கொள்ளும்முறை. பொருள் கோள்புரிந்து-வரைவுப் பொருளைக் கொள்ள விரும்பி. 264. பிரிந்தால் உயிர்போகும் எனக் குறிப்பிட்டாள். சாரார்-பகைவர். 265 கான் - பாலைவனம். நீர்கரப்பாடுகண் - கண்ணீர் தோன்றுமல் மறைக்க முயலும் கண்கள். சுரும்பு - வண்டு. சூழ்தல்-ஆராய்தல் 266. வெண்டேர்-கானல்நீர், தெரிகணை-ஆராய்ந்து கொண்ட அம்புகள், கழற்றுரை-இடித்துரைத்தல். 267. ஏற-மிகுதியாக, வல்சி-உணவு ஓவலர்-ஒழியார் 267. மூவா

### இதுவுமது.

சாவா மருந்தினும் சாலப் பயன்றரும் தண்கரந்தை
மூவா யிருந்தமிழ் மூன்றுந் தெரிந்தவர் முன்னியகான்
நாவா லுடற்கனல் நக்கித் தணிக்குஞ்செந் நாயினதால்
போவா ரலர்புகு வார்புலம் பேலினிப் பூங்குழலே.

### பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

268 தென்னரின் செந்தமிழ்ச்சீரறி யாருளம் போற்கருத்திங்
குன்னுரை போலிடித் துள்ளுணர் வில்லா ருரைக்கவிபோல்
மின்னியெ ழும்புயல் வீரூர் கரந்தையின் மெல்லியலே
என்னிரு கூர்விழி போன்மழை பெய்வான் இருவிசும்பே.

### இகுளை வம்பென்றல்.

269 முற்றப் பயின்றவர் மொய்க்குங் கரந்தையின் முத்தமிழைக்
கற்றுத் தெளியுமுன் னேகவி பாடிக் களிப்பவர்போல்
சுற்றத் துடன்முகில் சூழுமுன் னின்று சொரியுமழை
கொற்றத் துடன்பெயும் கார்கால மென்றுநீ கொள்வதென்னே?

### இறைமகள் மறுத்தல்.

270 பொருதியங் குந்தமிழ் வாழ்கரந் தைப்பதி போன்ருெளிர்வாய்
குருதியிற் கோபமண் கூரச் சிலைவான் குனிக்கவலர்
கருதியித் தோன்றியும் தோன்றிடக் கண்டினும் காரிலெனல்
பருதியைப் பட்டமிட் டேமறைப் போமெனும் பான்மையதே.

### அவர் தூதாகிவந்ததிப் பொழுதெனத் துணைவிசாற்றல்.

271 வெல்ல வருந்தமிழ் வீரூர்கரந்தை விளக்கமுறும்
நல்ல குறுந்தொகை நற்றிணை நூல்கள் நவிலுமுறை
வல்ல பெருந்தகை, வார்குழல்! முன்றன் வரவுனக்குச்
சொல்ல விடும்புயல் தூதென வேயறி துன்பொழிந்தே.

### தலைமகள் ஆற்றல்.

272 களவியல் கற்பொடு கற்பார் கரந்தைநங் காதலவர்
உளவியல் ஓர்ந்தில ரென்பதொவ் வாதவ ருன்னுடனே
அளவிய போதினி லாருயிர்ப் பேழைஎற் காவைஎன்ற
கிளவியி னுட்பொருள் தேறுக ஆறுக கேண்மைநெஞ்சே.

---

கெடாத, இரும்-பெரிய, முன்னிய-கடந்து சென்ற 268. பெய்வான்-பெய்வதற்காக 269. தன்னொத்த முகில்களுடன் கூடாமல் தனித்துப் பெய்யும் கோடை மழை என்றுள்.

270. பொருதியங்குந்தமிழ்-பிறமொழிகளோடு போரிட்டுயர்ந்த தமிழ். 271. கோபம் - இந்திர கோபப்பூச்சிகள். மண்கூர-நிலத்தில் மிகுந்து காண. சிலை-இந்திரவில், குனிக்க-வளைக்க

272. அளவிய-கலந்த 273. சுட்டுமுதலியவற்றின் துணையின்றி மொழிக்குமுன் வராத ஙகரம் தலைவனின்றி வாழ முடியாத

அவனவன் புலம்பல்.

273 செப்பேடு தேர்ந்தவர் வாழுங் கரந்தைத் தெளிதமிழுள்
நப்போலு வேனினிச் சுட்டவ் வினவுநீ ராவிரென்ற
ஒப்பேயி லாளுரை ஓர்ந்திலன் என்னுயி ரோவியந்தான்
இப்போது வாழ்நிலை எவ்வா றிருக்குமென் ஏழைநெஞ்சே?

மீண்டு வருங்காலைப் பாகனொடு சொல்லல்.

274 பண்பூக்கு நற்றமிழ்ப் பாடுங் கரந்தைநற் பாவையொப்பாள்
கண்பூக்க நின்றுதேர்க் காணுக்கிக் கண்ணீர் கலங்கிமதி
விண்பூக்கு மாலைகண் டேங்குமுன் மேவ விரைபரித்தேர்
மண்பூக்க என்னுளம் போல்விடு வாய்வல வாவிரைந்தே.

மேகத்தொடு சொல்லல்;

275 உறுப்பொடு செந்தமிழ்க் காவிய மோங்க உயர்கரந்தை
நெறிப்படு பாவலர் நெஞ்சந் திகழ்குறள் நின்னையன்றிச்
சிறப்பொடு பூசனை செல்லா தெனும்பொருள் தேர்ந்தனன்யான்
புறப்படு செய்திமுன் போய்முகில்! சொல்லுக பூங்குழைக்கே.

இதுவுமது.

பொருள்முற்றி மீளுமென் போற்கடல் நீருண்டு போம்முகிலே
அருள்முற்றி ஞர்மொழி ஆளுங் கரந்தை அடையலர்போல்
மருள்முற்றி மாமையைப் பீர்கொள மாழ்கி மனம்வருந்தும்
இருள்முற்று மீர்ங்குழற் கென்வர வின்னே இயம்புகவே,

பாங்கி வலம்புரி கேட்டவன் வரவறி வுறுத்தல்.

276 வேதம் விளைவுசெய் யாவருள் வேண்டி வியன்குருகூர்
நாதன் மலர்திரு வாய்மொழி நாடி நவில்கரந்தை
ஓதும் தமிழ்தெரிந் தார்மணித் தேர்பரி ஊர்வருமுன்
ஊதும் வலம்புரி கேட்டனை யோமகிழ் ஒண்டொடியே.

வலம்புரி கிழத்தி வாழ்த்தல்.

277 சங்கம் பறித்தவர் தஞ்சமென் றேமுனச் சங்கெடுத்துச்
சங்கம் புரிந்தவர் தஞ்சைக் கரந்தைநற் சங்கமதில்
சங்கம் புரிந்தபல் செஞ்சொற் றமிழ்தெரிந் தாரிடமார்
சங்கம்! புரிந்துயிர் தந்தனை வாழ்க! தழைத்துலகே.

---

தலைவிக்குவமை. 274. தேர்க்கால்-தேர் வரும்வழி 275. மாமை-அழகு, பீர்-பசப்பு, மாழ்கி-மயங்கி. 276. குருகூர்நாதன் - நம்மாழ்வார். 277. சங்கம்-வளையல். பறித்தவர்-பிரிவால் கழலச் செய்தவர். சங்கம்-கூட்டம், சங்கம் - மதுரைத் தமிழ்ச்சங்கம் - புரிதமிழ்-சங்கம் தந்த எட்டுத்தொகை முதலிய நூல்கள், சங்கம்! வலம்புரிச்சங்கே! 278. தணப்பு ஒழியாது-நீங்குதலை ஒழியாமல் (நீங்கி என்றபடி) விண்-மழை 279. கள்ளப்பிணி-வஞ்சிக்கும் படியான நோய். ஒழுக்கம் முதலியவற்றிற்காக முன்னோர்கள்

நல்லமகன் வந்துழிப் பாங்கி நினைத்தமை வினுதல்

278 தணப்பொழி யாதுமைத் தஞ்சமென் றோரைத் தவிக்கவிட்டு
மணப்பொருள் தேடிவின் மாறிய கானல் வழிநடந்தீர்
கணப்பொழு தாயினும் கையறு வேமைக் கருதினிரோ?
குணப்பொருள் தேர்கரந் தைத்தமிழ் போற்றும் குலத்திறையே.

தலைவன் நினைத்தமை செப்பல்.

279 உள்ளக் கிழியில் ஒளிருமென் னுருயி ரோவியத்தை
கள்ளப் பிணிமறப் பாகுங் கயவன் கலைப்பதென்ப
தெள்ளத் தனையுயிர் என்பா லுளவரை எய்திடுமோ?
கொள்ளச் சுவைக்கவி தோன்றுங் கரந்தையிற் றூமொழியே.

இதுவுமது,

முழக்கம் புரிகரந் தைத்தமிழ் மூழ்கிய மூதறிஞர்
ஒழுக்கம் பெறவுரை செய்சடங் குண்மையை ஓர்ந்திலரெம்
பழக்கம் எனத்தமிழ்ப் பண்பழிப் பாரெனப் பாவைமறந்
திழுக்கம் பெறுவதற் கோபொருட் கேகினன் ஏந்திழையே?

பாங்கி ஆற்றுவித்திருந்த அருமை கூறல்

280 தாருந் தகவுந் தணியாத காதலும் சாற்றியுன
தூரும் பெயரும் உறுபுகழ் யாவும் உரைத்தணங்கைச்
சாரும் துயரம் தடுத்தாற்றி னேன்யான் தனித்தமிழின்
சீருஞ் சிறப்புமிங் கோதுங் கரந்தையிற் சேரரசே.

## 19. வரைவு மலிவு.

காதலன் பரிசப்பொருள் விடுத்தமை பாங்கி காதலிக்குரைத்தல்.

281 தரிசைப் பயன்தரும் தண்டலை யாய்ச்செயும் தண்மழைபோல்
வரிசைப் படஉள மாண்பளிக் குந்தமிழ் வாழ்கரந்தை
அரசிப் பொழுதிரு ஆனையின் மேல்நம் அகநிறைய
பரிசப் பொருள்விடுத் தார்மணப் பானுனைப் பான்மொழியே.

காதலி நற்றாய் உள்ளமகிழ்ச்சி உள்ளல்.

282 பெண்பெற்ற வர்பெறும் பேறென்பர் நல்லமாப் பிள்ளைபெறின்
பண்பெற்ற பைங்கரந் தைத்தமிழ்க் காளையைப் பண்புருவை
மண்பெற்ற மன்னனை மங்கை! நம் அன்னை மருமகனுய்
நண்புற்ற தைப்பெறும் நற்றவ மாயெனும் நானிலத்தே.

---

உண்டாக்கிய சடங்குகளைப் பின்னோர் கண்மூடிப் பழக்கமாக மேற்கொண்டனர் ஆதலின் அவர் போல என்றான். எனவே தலைவியை மணப்பதற்காகப் பொருள் தேடப்போன யான் தலைவியையே மறந்துவிடுவேனு? என்று நினைத்தமை கூறினன். 280. தார்-மாலை, தகவு-பண்பு. 281 தரிசு-மேட்டுநிலம் தண்டலை-சோலை. அகம்-மனை. உள்ளமும் ஆம்.